ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
மின்னிதழில் வாசிக்க eelanadu.ca
முகநூலில் நாளாந்தச் செய்திகள்!

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி உட்பட அனைத்துக் காப்புறுதித் தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy (ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 31, 08 நவம்பர் 2024 இதழ்:- 23

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial Industrial Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்த நாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 23 செப்டம்பர் 2024 முதல் 14வது வருடத்தில் தொடரும் சேவை ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி. தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## அமெரிக்காவின் 47வது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் வெற்றி!



டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவின் 47வது ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு தோல்வியை ஏற்க மறுத்த முன்னாள் ஜனாதிபதியின் அசாதாரண மறுபிரவேசமாக இது அமைந்துள்ளது. இரண்டு படுகொலை முயற்சிகள் மற்றும் 34 குற்றச் செயல்களுக்கு மத்தியில் ட்ரம்பின் இந்த வெற்றி (3ம் பக்கம் பார்க்க)


## சுமந்திரனும் தமிழ்த்தேசியமும்

சட்டப்படி எவ்வாறாயினும், நடப்பின்படி இன்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவராக இருக்கின்ற மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் செவ்வாயன்று வடமராட்சியில் செய்தியாளர்கள் மகாநாடொன்றில் வைத்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு ஒரு சவாலை விடுத்தார். தனது பெயரைத் தவிர்த்து முடியுமானால் தேர்தல் பிரசாரத்தை செய்து காட்டுங்கள் பார்க்கலாம் என்பதே அந்த சவால். அவர் அந்த சவாலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை நோக்கி மாத்திரம் ஏன் விடுத்தார் என்று தெரியவில்லை. (4ம் ப்கம் பார்க்க)

## தமிழர்கள் மீதான ராஜபக்ஷாக்களின் மீறல்களுக்கு சர்வதேச விசாரணை அவசியம்! கனடிய கொன்சவேட்டிவ் கட்சித் தலைவர் பியெர் பொலிவ்ர் வலியுறுத்தல்

தமிழர்கள் மீதான இலங்கை அரசாங் கத்தின் மீறல்களுக்கு எதிராகத் தாம் குரலெழுப்ப வேண்டும் எனச் சுட்டிக் காட்டியுள்ள கனடாவின் கொன்சவேட்டிவ் கட்சித் தலைவர் பியெர் பொலிவ்ர், ராஜபக்ஷாக்கள் தொடர்பில் சர்வதேச அரங்கில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். இலங்கையில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் ஊடாக புதிதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் (6ம் பக்கம் பார்க்க)




## அமெரிக்காவின் துணை ஜனாதிபதி ஆகிறார் ஆந்திர மருமகன் ஜேடிவான்ஸ்

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

Team SIVA
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
Sales Representative B.Comm.
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



21 Years Real Estate Experience

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

**Bus: 416.298.3200**
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Simcoe St N. & Conlin Rd


**Oshawa** **$279,000**
0 Beds • 1 Bath • 1 Rooms
Welcome To University Studios!


### Sheppard Ave & Allen Rd

**Toronto** **$619,000**
2+1 Beds • 2 Baths • 4+1 Rooms
Close To Subway, Ttc, York University

### Neilson/Tapscott

**Scarborough** **$445,000**
2 Beds • 2 Bath • 5 Rooms
Close to the Hwy 401 and the TTC

### Kennedy Rd / Hwy 401

**Scarborough** **$699,000**
2+1 Beds • 2 Bath • 6 Rooms
Freshly painted & renovated!


### Sheppard & Neilson

**Malvern** **$699,900**
3 Beds • 2 Baths • 6 Rooms
Low Maintenance Fees!


### Simcoe St N/ Brittania Ave


**Oshawa** **$770,000**
4 Beds • 3 Baths • 9 Rooms
Corner lot Just like Semi Townhouse


### McLevin Ave & Morningside


**Malvern** **$880,000**
3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Finished Basement


### Townline Rd & Shankel Rd

**Oshawa** **$999,900**
3 Beds • 4 Baths • 8 Rooms
Close To Highway 401, 418, 407

### Sheppard Ave E / Neilson Rd

**Scarborough** **$842,000**
3 Beds • 3 Baths • 6+2 Rooms
FULLY RENNOVATED

### Church St N & Rossland Rd W

**Ajax** **$899,999**
3 Beds • 3 Baths • 6 Rooms
Hardwood flooring throughout


### Church St N & Rossland Rd W

**Ajax** **$899,999**
3 Beds • 3 Baths • 6 Rooms
Upgraded Hardwood Floors

### Kellough St/ Mcneil St

**Innisfil** **$1,295,000**
4+1 Beds • 5 Baths • 11+3 Rooms
Open concept, large eat-in kitchen

### Ninth Line/Donald Cousens

**Markham** **$630,000**
2 Beds • 2 Baths • 4 Rooms
Minutes to Stouffville Hospital

### Mara & King

**Beaverton** **$729,800**
4 Beds • 3 Baths • 9 Rooms
2300 Square Foot Home

### Finch Ave E/ Morningside Ave
FOR LEASE

**Scarborough** **$2,500**
3+1 Beds • 3 Bath • 10+3 Rooms
Nicely Maintained And Cleaned

### Scarborough Golf/Lawrence Ave
FOR LEASE

**Scarborough** **$1,900**
2 Beds • 1 Bath • 4 Rooms
Lovely Corner Bungalow

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# அமெரிக்காவின் 47வது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் வெற்றி! கமலாஹரிஸ் வாழ்த்து!

டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவின் 47வது ஜனாதிபதியாக தேர்ந்தெடு க்கப்பட்டார். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு தோல்வியை ஏற்க மறுத்த முன்னாள் ஜனாதிபதியின் அசாதாரண மறுபிரவேசமாக இது அமைந்துள் ளது. இரண்டு படுகொலை முயற்சி கள் மற்றும் 34 குற்றச் செயல்களுக்கு மத்தியில் ட்ரம்பின் இந்த வெற்றி கிடைத்துள்ளது.



விஸ்கான்சினில் வெற்றி பெற்ற குடியரசுக் கட்சியின் வேட்பாளர், ஜனாதிபதி பதவிக்கு தேவையான 270 தேர்தல் கல்லூரி வாக்குகளைப் பெற் றார். அலாஸ்கா, விஸ்கான்சினின் அண்மைய மற்றும் முக்கியமான முடிவுகளுடன் டொனால்ட் ட்ரம்ப் இப்போது 279 தேர்தல் கல்லூரி வாக்குகளைப் பெற்றுள்ளார்.

இதனிடையே கமலா ஹாரிஸ், நியூ ஹாம்ப்ஷயரில் வெற்றி பெற்ற நிலை யில் 223 தேர்தல் கல்லூரி வாக்கு களை பெற்றுள்ளார்.

ட்ரம்பின் வெற்றியானது அமெரிக்கா வின் பணவீக்கம் மற்றும் குடியேற்ற த்தைச் சுற்றியுள்ள பொது மக்களின் விரக்திகள் எவ்வளவு ஆழமாக இருந்தன என்பதை அடிக்கோடிட் டுக் காட்டுகிறது.

க்ரோவர் க்ளீவ்லேண்டிற்குப் (Grover Cleveland) பின்னர், இரண்டு சந்தர் ப்பங்களில் பதவி வகிக்கும் இரண் டாவது ஜனாதிபதியாக ட்ரம்ப் ஆவார்.

க்ரோவர் க்ளீவ்லேண்ட் அமெரிக்கா வின் 22 ஆவது ஜனாதிபதியாக 1885 முதல் 1889 வரையும் 24 ஆவது ஜனாதிபதியாக 1893 முதல் 1897 வரையும் இருந்தார்.

ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாக முதல் முறையாக 2016 முதல் 2020 க்கு இடையில் இருந்தார். எனினும், 2020 தேர்தலில் ஜோ பைடனிடம் தோல்வியடைந்த பிறகு அவர் இரண்டாவது முறையாக வெற்றி பெறத் தவறினார்.

இந்த நிலையில் இரண்டாவது முறையாக ட்ரம்ப் ஜனாதிபதியாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அமெரிக்க வரலாற்றில் 78 வயதில் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட மிக வயதான நபர் ட்ரம்ப் ஆவார். ட்ரம்ப் போட்டியிட்ட இரண்டு முறையும் முறையே ஹெலரி கிளிங் டன், கமலா ஹரிஸ் ஆகிய இரண்டு பெண்மணிகளுடன் போட்டியிட்டே வெற்றி பெற்றார் என்பதும் குறிப் பிடத்தக்கது.

## கமலா ஹரிஸ் வாழ்த்து

நடந்து முடிந்த அமெரிக்க ஜனாதி பதித் தேர்தலில் வெற்றி பெற்ற குடியரசு கட்சியைச் சேர்ந்த டொனா ல்ட் ட்ரம்பிற்கு ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் கமலா ஹரிஸ் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். வெளியான தேர்தல் முடிவுகளின் படி 270–க்கும் கூடுதலான எலக்டோரல் வாக்குகளை பெற்று முன்னாள் ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் மீண்டும் வெற்றி பெற்றுள்ளார். இந் நிலையில் தேர்தல் முடிவுகள் வெளி யானதன் பின்னர், முதன் முறையாக ஹோவர்டு பல்கலைக்கழகத்தில் தன்னுடைய ஆதரவாளர்கள் முன் தோன்றி கமலா ஹாரிஸ் உரையாற்றி னார்.



இதன் போது அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் பெற்ற தோல்வியை தான் ஏற்றுக் கொள்வதாகவும், குடியரசு கட்சியை சேர்ந்த, ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் ட்ரம்பிற்கு தான் வாழ்த்துத் தெரி விப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் அமைதியான முறையில் அதிகார பரிமாற்றம் மேற்கொள்ளப் படும் எனவும் அவர் உறுதியளித்து ள்ளார்.

மேலும், மக்கள் தன் மீது வைத்த நம்பிக்கைக்காக, தான் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதாகவும், இனி வரும் காலங்களில் தான் பெண்களின் உரிமைகளுக்காகவும், துப்பாக்கி வன்முறைக்கு எதிராகவும் தொட ர்ந்து போராடவுள்ளதாகவும் கமலா ஹரிஸ் தெரிவித்துள்ளார்.

## இந்தியப் பிரதமர் வாழ்த்து

என் நண்பர் டொனால்ட் டிரம்பிற் மன மார்ந்த வாழ்த்துக்கள் என அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற டொனால்ட் டிரம்பிற்கு இந்தியபிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்து ள்ளார்.இது தொடர்பாக அவர் வெளி யிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரி வித்துள்ளதாவது அமெரிக்காவில் வரலா ற்று சிறப்புமிக்க தேர்தல் வெற்றி பெற்ற என் நண்பர் டொனால்ட் டிரம்ப்பிற்கு மனமார்ந்த வாழ்த்துக்கள். இந்தியா–அமெரிக்க விரிவான உலக ளாவிய கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்த எங்கள் ஒத்துழைப்பைப் புதுப்பிக்க நான் எதிர்நோக்குகிறேன். நமது மக்களின் முன்னேற்றத்திற்காக வும் உலகளாவிய அமைதி ஸ்திரத் தன்மை மற்றும் செழிப்பு ஆகிய வற்றை மேம்படுத்தவும் நாம் பாடுபடு வோம் இவ்வாறு அவர் பதிவிட்டு ள்ளார்.



Balachandran Law Office
Balachandran Muthaiah
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


# சுமந்திரனும் தமிழ்த்தேசியமும்





சட்டப்படி எவ்வாறாயினும், நடப்பின்படி இன்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவராக இருக்கின்ற மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் செவ்வாயன்று வடமராட்சியில் செய்தியாளர்கள் மகாநாடொன்றில் வைத்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு ஒரு சவாலை விடுத்தார். தனது பெயரைத் தவிர்த்து முடியுமானால் தேர்தல் பிரசாரத்தை செய்து காட்டுங்கள் பார்க்கலாம் என்பதே அந்த சவால். அவர் அந்த சவாலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை நோக்கி மாத்திரம் ஏன் விடுத்தார் என்று தெரியவில்லை.

தேர்தலில் தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தி போட்டியிடும் சகல கட்சிகளுமே அவருக்கு எதிராக தீவிரமாக பிரசாரம் செய்கின்றன. சுமந்திரன் அவ்வாறு ஒரு சவாலை விடுக்கிறார் என்றால் அந்த அளவுக்கு அவரையும் தமிழ் அரசு கட்சியையும் தேர்தலில் தங்களுக்கு பெரிய சவால் என்று பொன்னம்பலம் தரப்பினர் கருதுகிறார்களா? சுமந்திரன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் உறுப்பினராக பாராளுமன்ற பிரவேசம் செய்த நாட்களில் இருந்தே இனப்பிரச்னை தொடர்பிலான அவரின் அணுகுமுறையை கடுமையாக விமர்சித்து வந்தவர் பொன்னம்பலம். ஒரு கட்டத்தில் அவர் கூட்டமைப்பில் இருந்து விலகி தனி வழியில் அரசியல் பயணத்தை தொடருகிறார். கூட்டமைப்பில் இருந்த கட்சிகளுடன் அரசமைப்புக்கான 13ஆவது திருத்தம் மற்றும் ஒற்றையாட்சி தொடர்பில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாகவே தாங்கள் வெளியேறினரென அமெரிக்க தூதுவரிடம் பொன்னம்பலம் கடந்த வாரம் கூறியிருந்த

அதேவேளை பாராளுமன்ற தேர்தலில் ஆசன ஒதுக்கீட்டில் தோன்றிய முரண்பாடே அவரின் வெளியேற்றத்துக்குக் காரணம் என்று சுமந்திரன் வடமராட்சி செய்தியாளர்கள் மகாநாட்டில் கூறியிருக்கிறார்.

அது பழைய கதை என்பதால் இன்றைய சூழ்நிலையில் மக்களுக்கு அதில் பெரிதாக அக்கறை இருக்கும் என்று நம்புவதற்கில்லை. வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் சார்பில் பலம் பொருந்திய அணியாக தங்களை பாராளுமன்றம் அனுப்புமாறு முக்கியமான சகல தமிழ்க் கட்சிகள் அல்லது கூட்டணிகள் மக்களிடம் வேண்டுகின்றன. ஆனால், தமிழ்க் கட்சிகளிடையில் காணப்படும் படுமோசமான பிளவுகள் காரணமாக பெரும் அதிருப்திக்கு உள்ளாகியிருக்கும் தமிழ் மக்கள் இந்தத் தடவை எவ்வாறு வாக்களிப்பார்கள் என்பது குறித்துத் திட்டவட்டமாக எதையும் கூற முடியாமல் இருக்கிறது.

வடக்கில் குறிப்பாக, யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரதான போட்டி ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணிக்கும் தமிழ் அரசு கட்சிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையிலானதாக இருக்கும் என்பதே பொதுவான அபிப்பிராயமாக இருக்கிறது. மற்றைய தமிழ் கட்சிகள் எல்லாம் சிதறுப்பட்டிருக்கும் நிலையில் ஒருவிதமான கோட்பாட்டு பிடிவாதத்துடன் நிற்பது தங்களுக்கு கணிசமானளவுக்கு அனுகூலமாக அமையலாம் என்று பொன்னம்பலம் தரப்பு நம்புகிறதுபோன்று தெரிகிறது.

இது இவ்வாறிருக்க, அண்மைக் கால பாராளுமன்ற தேர்தல்களில் முன்னென்றும் இல்லாத அளவுக்கு வடக்கில் பல கட்சிகளாலும் சுற்றிவளைத்து கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகும் தனியோர் அரசியல்வாதியாக சுமந்திரன் விளங்குகிறார். இது அவருக்கு பலமா பலவீனமா என்பதை தேர்தல் முடிவுகளின் மூலம் மாத்திரமே தெரிந்து கொள்ள முடியும். சுமந்திரன் தமிழர் அரசியலில் செல்வாக்குமிக்கவராக தலையெடுத்தால் தமிழ்த் தேசியத்துக்கு பெரும் பாதிப்பு என்றும் அந்தத் தேசியத்தை காப்பாற்ற வேண்டுமானால் அவரை தோற்கடிக்க வேண்டும் எனவும் உள்நாட்டில் பெரும்பாலான தமிழ் கட்சிகள் மாத்திரமல்ல, புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தில் உள்ள பல்வேறு குழுக்களும் கூறுகின்றன. தமிழ் அரசு கட்சியில் ஒரு பிரிவினரின் நிலைப்பாடும் அதுவே என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசியம்.

ஒரு கோணத்தில் நோக்கும் போது சுமந்திரனை சுற்றியதாகவே தமிழ்த் தேசிய அரசியல்களத்தில் வாதப் பிரதிவாதங்கள் அண்மைக்காலமாக அமைந்திருக்கின்றன. அதற்கு தமிழ்த் தேசியம் என்று தாங்கள் வியாக்கியானம் செய்யும் கோட்பாட்டுக்கு எதிராக சுமந்திரன் செயல்பட்டு வருகிறார் என்று அவருக்கு எதிரானவர்கள் கருதுவது தான் காரணமா அல்லது வேறு ஆளுமை மோதல் தான் காரணமா என்பது முக்கியமான கேள்வி. அதற்கான பதிலை அறிய வடக்கு மக்கள் நிச்சயம் விரும்புவார்கள். அதனால், தமிழ்த் தேசியத்துக்கு சுமந்திரன் செய்த பாதகங்களையும் தமிழ்த் தேசியத்தை தூய்மை கெடாமல் தொன்மை நலத்துடன் பாதுகாப்பதற்கு கடந்த பதினைந்து வருடங்களாக தாங்கள் செய்த காரியங்களையும் அவரை எதிர்த்து நிற்கும் தமிழ் அரசியல்வாதிகள் தெளிவாக விளக்கினால் பயனுடையதாக இருக்கும். தேர்தலுக்கு முதல் தமிழ் மக்களுக்கு தெளிவு வேண்டும்.






கனடா – அருள்மிகு
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)
Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

அனைத்து அம்பாள் அடியார்களிற்கும் வணக்கம்!

அருள்மிகு கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் பக்தர்களுக்கு வணக்கம். கனடா ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் இலாப நோக்கமற்ற தொண்டு நிறுவனமாக கனடா அரசாங்கத்தினால் அங்கீகாரம் பெற்றுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இதுவரை காலமும் கோயில் நிலம் வாங்குவதற்கு நன்கொடை கொடுத்த பக்தர்கள் அனைவரும் உங்கள் பழைய பற்றுச்சீட்டை கோயிலில் கொடுத்து கனடிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலக்கம் பதியப் பெற்ற புதிய பற்றுச்சீட்டை கோயிலில் பெற்றுக் கொண்டு அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச் சலுகையை பெற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இனி வரும் காலங்களில் கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலுக்கு நிலம் வாங்குவதற்கும் இப்போது நடைபெறும் திருப்பணிக்காக நன்கொடை செய்வதற்கும் அல்லது எந்தவிதமான பூஜைகள் திருவிழாக்களிற்கும் கோயிலில் பணம் கொடுக்கும் போது அதற்குரிய பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளுவதன் மூலம் அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச்சலுகையை பெற்றுக்கொள்ளலாம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஓம் தாயே மகமாரி – நிர்வாகசபை

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# சைபர் எதிரியாக இந்தியாவை வகைப்படுத்திய கனடா

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான கனேடிய அரசாங்கம் அதன் அண்மையை நடவடிக்கையாக இந்தியாவை ஒரு சைபர் எதிரியாக வகைப்படுத்தி, இணைய பாதுகாப்பில் உள்ள விரோத நாடுகளின் பட்டியலில் சேர்த்துள்ளது.

இந்தியாவிற்கும் கனடாவிற்கும் இடையிலான இராஜதந்திர நெருக்கடி நாளுக்கு நாள் மோசமடைந்து வரும் நிலையில் கனேடிய அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை வந்துள்ளது.

இந்த தீர்மானத்துக்கு இந்திய வெளி விவகார அமைச்சகம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளதுடன், கனடா இந்தியாவின் உலகளாவிய நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சிப்பதாக குற்றம் சாட்டியுள்ளது.

இதனிடையே கனடா, அங்குள்ள



தமது தூதரக ஊழியர்கள் மீது கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளதாக இந்திய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந்திய அதிகாரிகளை கனடா ஒடியோ மற்றும் வீடியோ கண்காணிப்பில் வைத்துள்ளதாகவும்,

இதுபோன்ற நடவடிக்கைகளின் மூலம் அவர்கள் துன்புறுத்தப்படுவதாகவும் அச்சுறுத்தப்பட்டதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

# காலிஸ்தான் கொடியுடன் போராட்டத்தில் ஈடுபட்ட கனேடிய பொலிஸ் அதிகாரி பணி நீக்கம்!



சார்ஜென்ட் ஹரிந்தர் சோஹி என்ற கனடாவின் பொலிஸ் அதிகாரி, அண்மையில் பிராம்ட்டனில் இந்துக்கோயில் தாக்கப்பட்ட போது காலிஸ்தான் கொடியை கையில் ஏந்தியவாறு போராட்டத்தில் பங்கேற்றமை கண்டறியப்பட்டுள்ளது. இதனையடுத்து அவர் பணியில் இருந்து இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.



போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் இந்தியாவுக்கு எதிரான கோசங்களை எழுப்பிய நிலையில் குறித்த பொலிஸ் அதிகாரி, சாதாரண உடையில், காலிஸ்தானிய கொடியை கையில் ஏந்தி அந்த போராட்டத்தில் பங்கேற்றமையை காணொளிகள் நிரூபித்துள்ளன.

ஹரிந்தர் சோஹி, 18 வருடங்களாக கனேடிய பொலிஸில் சேவையாற்றி வருகிறார். இந்த நிலையில், கடமை தவறிய இந்த அதிகாரி, போராட்டத்தில் கலந்து கொண்டதை, பீல் பொலிஸ் துறையின் செய்தித் தொடர்பாளர் ரிச்சர்ட் சின் உறுதி செய்துள்ளார்.

இதனையடுத்து அவர் சமூகப் பாதுகாப்பு மற்றும் பொலிஸ் சட்டத்தின்படி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கனடாவில் உள்ள இந்து கோயில் ஒன்றின் மீது கடந்த சில நாட்களுக்கு முன்னர் தாக்குதல் நடத்தப்பட்டமை குறித்து இந்திய பிரதமர் தமது கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

இந்திய உயர்ஸ்தானிகரக அதிகாரிகள் அந்த கோயிலுக்குள் இருந்த போதே இந்தத் தாக்குதல் நடந்துள்ளமை குறித்து பிரதமர் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

# தமிழரசுக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் திருத்தம்

தமிழரசுக்கட்சியின் தேர்தல் விஞ்ஞபனத்தில் திருத்தமொன்றைச் செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழரசுக்கட்சியின் விஞ்ஞபனம் வெளியிடப்பட்டுள்ளது.

வெளியீட்டு நிகழ்வுக்கு முன்னதாக குறித்த விஞ்ஞாபனத்தை மாவை.சோ.சேனாதிராஜாவிடத்தில் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது. அதன் போது அங்கு பிரசன்னமாகியிருந்த சிவஞானம் சிறிதரன் விஞ்ஞாபனத்தின் ஐந்தாவது பிரிவில் காணப்படுகின்ற தவறைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனையடுத்து விஞ்ஞாபன வரைவில் பங்கேற்ற சுமந்திரன் உள்ளிட்டவர்கள் அதனை மீளத் திருத்துவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். அந்த வகையில் குறித்த விஞ்ஞாபனத்தில் 'கடந்த காலத்தினை கையாளுதல்' எனும் ஐந்தாவது பகுதியின் முதலாவது பிரிவான 'நீதி மற்றும் பொறுப்புக்கூறல்' தலைப்பின் கீழ் இனக்கலவரத்தின் வரலாறு முழுவதும் தமிழ் மக்கள் அனுபவித்த மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்களுக்கு நீதி என்பது விட்டுக் கொடுப்பற்றதாகவும் அவர்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதில் இன்றியமையாத ஒரு அங்கமாக அமைகிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 'இனக்கலவரத்தின் வரலாறு முழுவதும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளமையானது, தவறானது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதற்கமைவாக குறித்த சொற்றொடர் இனமுரண்பாட்டின் வரலாறு முழுவதும் என்றோ அல்லது இனஅழிப்பின் வரலாறு முழுவதும் என்றோ மாற்றப்படவுள்ளதாக கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
32வது ஆண்டு விழா
23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை
சங்கீத சங்கமம் 2025
விபரங்களுக்கு:- 416 841 9600


# காட்சி கூடக் காட்டத் தெரியாத கட்சி

இந்த வருடம் ஜனவரியில் தலைவரைத் தெரிவு செய்வதற்கு பொதுச்சபையில் நடந்த தேர்தலுக்கு பிறகு இலங்கை தமிழ் அரசு கட்சி இரு முகாம்களாகவே இயங்கிக் கொண்டிருக்கிறது. யாழ்ப்பாண மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரனையும் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரனையும் இரு துருவங்களாகக் கொண்டே அந்த முகாம்கள் அமைந்திருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியும்.

தலைவர் பதவிக்கான தேர்தலில் சிறீதரன் வெற்றி பெற்றபோதிலும் நீதிமன்றில் விசாரணையில் உள்ள வழக்குகள் காரணமாக அவரால் அந்தப் பதவியை இன்று வரை பொறுப்பேற்க முடியாமல் இருக்கிறது. இதேவேளை, சுமந்திரன் மத்திய செயல்குழுவில் தனக்கு இருக்கும் ஆதரவை அனுகூலமாக பயன்படுத்திக் கொண்டு தற்போது தமிழ் அரசு கட்சியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்.

மத்திய செயல்குழுவை கூட்டுவது தொடக்கம் தேர்தல்களில் வேட்பாளர்களை நியமிப்பது வரை இன்று சகல விடயங்களையும் தீர்மானிக்கும் ஒரு வலிமையான நிலையில் சுமந்திரன் இருக்கிறார். கட்சியின் தலைவராக இன்னமும் தொடர்கிறாரென நம்பப்படும் மாவை சேனாதிராசாவும் சிறீதரனும் தங்களின் விருப்பத்தின் பிரகாரம் மாவட்ட வேட்பாளர்கள் பட்டியலில் ஒருவரைக் கூட இடம்பெறச் செய்ய முடியாதவர்களாக கையறு நிலையில் நிற்பது பரிதாபம்.

தலைவர் தேர்தலில் வெற்றி பெற்றவர் எதையும் செய்ய முடியாமல் இருக்க, தோல்வி கண்டவர் கட்சியைத் தனது கட்டுப்பாட்டில் (தற்காலிகமாக வேனும்) எவ்வாறு கொண்டு வரக் கூடியதாக இருந்தது என்பதற்கு பதில் கூற வேண்டிய கடப்பாடு வேறு யாருக்கும் அல்ல மாவை சேனாதிராசாவுக்கும் சிறீதரனுக்குமே பெருமளவுக்கு இருக்கிறது.

இந்த விடயங்களை இங்கு கூறுவதற்கு ஒரு காரணம் பாரம்பரியமாக வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்து வந்த இரு மாகாணங்களிலும் பரந்தளவில் தமிழ் மக்களின் ஆதரவைக் கொண்டிருந்த ஓர் அரசியல் இயக்கத்தின் கதி பாராளுமன்றத் தேர்தலுக்கு பிறகு எவ்வாறு அமையப் போகிறது என்ற அக்கறையே யாகும். அடுத்த பாராளுமன்றத்தில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் எந்தக் கோலத்தில் அமையப் போகிறது என்ற ஏக்கம் அடுத்த காரணம்.

நாம் விரும்புகிறோமோ இல்லையோ உள்நாட்டு போரின் முடிவுக்கு பின்னரான சூழ்நிலையில் பாராளுமன்றத்தில் உருப்படியான பிரதிநிதித்துவத்தைக் கொண்டிரா விட்டால் எந்தவொரு தமிழ்க் கட்சியாலும் பயனுறுதியுடைய செயல்பாட்டை முன்னெடுக்க முடியாத நிலையே இன்றும் காணப்படுகிறது. பாராளுமன்றத்துக்கு வெளியில் ஜனநாயக ரீதியில் என்றாலும், உறுதியான அரசியல் போராட்ட இயக்கத்தை முன்னெடுக்கக் கூடிய அரசியல் துணிவாற்றலோ அல்லது வல்லமையோ அல்லது அர்ப்பணிப்பு சிந்தையோ இன்றைய தமிழ்க் கட்சிகளில் எந்த ஒன்றிடமும் இல்லை. வெறுமனே மக்களை உணர்ச்சி வசப்படுத்த பழைய சுலோகங்களை உச்சரிக்க மாத்திரமே அவற்றின் தலைவர்களுக்கு தெரியும்.

அதனால், தமிழ் அரசு கட்சி உருப்படியான பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்கு தங்களது இன்றைய செயல்பாடுகள் எந்தளவுக்கு உதவும் என்பது குறித்து அதன் தலைவர்கள் என்று சொல்லப்படுவோர் கிஞ்சித்தேனும் சிந்தித்துப் பார்க்கிறார்களா என்று கேட்காமல் இருக்க முடியவில்லை. சில தினங்களுக்கு முன்னர் யாழ். நகரில் தந்தை செல்வா கலையரங்கில் தமிழ் அரசு கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்ட நிகழ்வில் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட முதன்மை வேட்பாளர் சிறீதரனை காணவில்லை. ஆனால், அதற்கு முதல் சேனாதிராசாவிடம் விஞ்ஞாபனம் கையளிக்கப்பட்ட போது அங்கு அவர் நின்றார். தனது செயலுக்கான காரணத்தை இதுவரையில் அவர் மக்கள் அறிய கூறவில்லை.

அந்த செயல் மூலமாக சிறீதரன் தமிழ் அரசு கட்சியின் தொண்டர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ் மக்களுக்கும் கூறுகின்ற செய்திதான் என்ன? கட்சிக்குள் கூர்மையான முரண்பாடுகள் இருக்கின்றன என்பது உண்மை. தலைவர்களுக்கு இடையில் தன்னகம்பாவ போட்டி நிலவுகின்றது என்பதும் உண்மை.

(7ம் பக்கம் பார்க்க)

# தமிழர்கள் மீதான ராஜபக்ஷாக்களின் மீறல்களுக்கு சர்வதேச விசாரணை அவசியம்! கனடிய கொன்சவேட்டிவ் கட்சித் தலைவர் பியெர் பொலிவ்ர் வலியுறுத்தல்

தமிழர்கள் மீதான இலங்கை அரசாங்கத்தின் மீறல்களுக்கு எதிராகத் தாம் குரலெழுப்ப வேண்டும் எனச் சுட்டிக் காட்டியுள்ள கனடாவின் கொன்சவேட்டிவ் கட்சித் தலைவர் பியெர் பொலிவ்ர், ராஜபக்ஷாக்கள் தொடர்பில் சர்வதேச அரங்கில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் ஊடாக புதிதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் முன்மொழியப்பட்ட பிரேரணையை முற்றாக நிராகரித்திருப்பது குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு அளித்திருக்கும் பதிலிலேயே பியெர் பொலிவ்ர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

'தமிழ் மக்கள் மீதான இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமைகள் மீறல்களுக்கு எதிராக நாம் குரல் கொடுக்க வேண்டும். நாம் ராஜபக்ஷாக்களை சர்வதேச அரங்கில் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்' என அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு கொன்சவேட்டிவ் கட்சியின் ப்ரியன் மல்ரொனியே முதன்முறையாக தமிழர்களுக்கு கனடாவுக்குள் இடமளித்ததாகவும், தமது கட்சியைச் சேர்ந்த ஜோன் பெய்ர்ட் மற்றும் ஸ்டீவன் ஹார்பர் ஆகியோர் கடந்த கால அரசாங்கத்தினால் நிகழ்த்தப்பட்ட மீறல்கள் தொடர்பில் எதிர்ப்பை வெளிக்காட்டும் வகையில் கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணித்ததாகவும் சுட்டிக் காட்டியுள்ள பியெர் பொலிவ்ர், எனவே இவ்விடயத்தைப் பொறுத்தமட்டில் கொன்சவேட்டிவ் கட்சி




நீண்ட காலமாக நேர்மறையான விதத்தில் செயற்பட்டு வந்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். அதுமாத்திரமன்றி தமிழினப் படுகொலையில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# என் கணவருக்கு நேர்ந்தது போல் என்னையும் கொல்லத் திட்டம்! பாதுகாப்பைக் குறைக்காதீர்களென அநுரவிடம் சந்திரிகா கெஞ்சல்!



அரசியல் காரணங்களுக்காக தனது கணவர் விஜய குமாரதுங்க கொலை செய்யப்பட்டது போல, தன்னையும் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டப்படுவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தமக்கு வழங்கப்பட்டுள்ள மெய்ப்பாதுகாவலர்களை குறைப்பது தொடர்பில் பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்னவுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே முன்னாள் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார். சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ஹேமசிறி, ஒக்டோபர் 31 ஆம் திகதி வழங்கிய குறித்த கடிதத்தில், தனது மெய்ப்பாதுகாவலர்களின் எண்ணிக்கையை 50ல் இருந்து 30 ஆக குறைக்கவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய முன்னாள் ஜனாதிபதிகளுக்கு முறையே 243 மற்றும் 200 மற்றும் 109 நபர்களை கொண்ட பாதுகாப்பு அதிகாரிகள் குழுக்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில், எந்த அளவுகோலின் படி தனக்கு மட்டும் 30 மெய்ப் பாதுகாவலர்களை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்பது தனக்கு புதிராகவே இருப்பதாகவும் குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், ஓய்வு பெற்ற ஐந்து ஜனாதிபதிகளில் தாம் தான் மிகவும் அச்சுறுத்தலுக்கு உள்ளானவர் எனவும், கொலை முயற்சியில் காயமடைந்த ஒரே ஜனாதிபதி தாம் எனவும் முன்னாள் ஜனாதிபதி தனது கடிதத்தில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது இவ்வாறிருக்க முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் பாதுகாப்பு நீக்கப்படவோ அல்லது குறைக்கப்படவோ இல்லையென அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் எனது பெயரைத் தவிர்த்து பிரச்சாரம் செய்ய முடியுமா? கஜேந்திரகுமாருக்கு சுமந்திரன் சவால்!

தேர்தல் பிரசார மேடைகளில் எம்.ஏ.சுமந்திரனின் பெயரைத் தவிர்த்து முடிந்தால் ஏனைய கட்சிகள் உங்களது தேர்தல் பரப்புரைகளை செய்யுங்கள் பார்க்கலாம் என எம்.ஏ.சுமந்திரன் சவால் விடுத்துள்ளார்.

யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்து முதலில் வெளியேறியவர்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தான். மக்களைக் கொண்றொழித்த சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளித்து தீர்மானம் எடுத்த போது மேடையில் ஒன்றாய் இருந்தவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.



இம்முறை தமிழரசுக் கட்சி சஜித்தை ஆதரித்த போது சிங்களவன் ஒருவரை மானத் தமிழன் ஆதரிப்பான என்றார்கள். கஜேந்திரகுமார் சும்மா சிங்களவரை அல்ல, இராணுவத் தளபதியையே ஜனாதிபதியாக ஆதரித்தவர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பை யார் உடைத்தது? கூட்டமைப்பை ஆசனத்திற்காக முதலாவதாக உடைத்தவர் கஜேந்திரகுமார். 2010 பொதுத் தேர்தல் நியமன வழுங்கலில் அவரது கட்சிக்கு அவர் கேட்ட நியமனங்கள் வழங்கப்படாததால் கொள்கை முரண்பாடு என்று பொய் சொல்லிக் கொண்டு கட்சிக்கு வெளியே சென்றவர் தான் கஜேந்திரகுமார். ஆசனம் கிடைக்காமல் வீட்டை விட்டு வெளியேறி விட்டு பிள்ளையார் சுழி போட்டவர் அவர். அது இன்று வரை சங்காக, மாம்பழமாகத் தொடர்கிறதெனவும் பருத்தித்துறையில் தேர்தல் பிரச்சாரத்தின் போது கருத்து வெளியிட்டுள்ளார்.

அதன் பின்னர் பொதுத் தேர்தல் ஒன்றின் போது ஆசனப் பங்கீட்டின் போதே கட்சியை விட்டு வெளியேறினார். இணைந்த வடக்கு – கிழக்குத் தேசமென முழங்கும் நீங்கள் கடந்த தடவை கிடைத்த போனஸ் ஆசனத்தைக் கிழக்குக் கொடுத்தீர்களா? நீங்கள் அதைத் தேர்தலில் தோற்ற உங்கள் கஜேந்திரனுக்குக் கொடுத்து விட்டு வடக்கு கிழக்கு இணைப்பு எனப் படம் போடுகிறீர்கள்.

கிழக்கில் அவ்வளவு கரிசனையென்றால் நீங்கள் கிழக்குக்கு அந்த நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் கொடுத்திருப்பீர்கள். உங்களுக்குக் கிழக்கில் கரிசனையில்லை. வாயளவில், தேர்தல் காலங்களில் 'வவுனியாவில் நிலம் பறிபோகின்றது. மட்டக்களப்பில் நிலம் பறி போகின்றது' என்கிறீர்கள்.

குருந்தூர்மலை, வெடுக்குநாறி மலை, கிண்ணியா என்று ஒரு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சட்டத்தரணி கதை அளக்கின்றார். மக்களது வெகுஜனப் போராட்டங்களோடு, அத்தனை நிலங்களையும் வழக்கு வைத்துப் பாதுகாப்பது நாங்கள். வகுப்பெடுத்தவர் ஒரு சட்டத்தரணி. அவரை நான் இவை தொடர்பில் ஒரு நீதிமன்றப் பக்கமும் கண்டதில்லை.

வழக்காடி வெல்வது நாங்கள். போராடுவது மக்கள். படமெடுத்து பேஸ்புக்கில் போடுவது நீங்கள். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை அடுத்து தேசிய அரசு அமைந்தால் அரசுக்கு ஆதரவளிப்போம். பொதுத் தேர்தலை அடுத்து தேசிய அரசு அமைந்தால் அரசுக்கு ஆதரவளிப் போம் ஆனால் எதிர்க்கட்சி வரிசையிலேயே அமர்வோம். நல்லாட்சி போன்று.

சாள் நிர்மலநாதன் பார் பார்மிட்டுக்கு கடிதம் கொடுத்தது உண்மையே எனவும் குடுத்த கடிதத்தை ஒழித்து வைத்து விட்டு இப்போ முடிந்தால்க் காட்டுங்கள் பார்ப்போம் என்று சவால் விடுகிறார். அத்தோடு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்துள்ளார். அவர் ஒன்றும் செய்ய முடியாது. அதனாலேயே அவர் தேர்தலில் இருந்து தானாக வெளியேறினார், விக்னேஸ்வரனும் போட்டியிடாது வெளியேறினார்.

அதே போல் வேறு சிலரும் உள்ளே இருக்கிறார்கள் அவர்களும் தாமாக வெளியேறினால் நல்லது. என சுமந்திரன் மேலும் தெரிவத்தார்.

## 9வது இனிய பிறந்த நன்நாள் வாழ்த்து



## செல்வன் டெனன் ஈஸ்வத் சங்கர்

கனடாவில் வசிக்கும் திரு திருமதி சங்கர் ஜெலிசா தம்பதிகளின் செல்வப்புதல்வன் டெனன் ஈஸ்வத் சங்கரின் ஒன்பதாவது பிறந்த நன்நாள் 31 ஒக்டோபர் 2024 வியாழக்கிழமையாகும். அன்றையதினம் செல்வன் டெனன் தனது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

அகவை ஒன்பது காணும் செல்வன் டெனன் ஈஸ்வத் சங்கர் பல்கலையும் கற்றுப் பார் போற்றும் பைந்தமிழ் மகனாக வாழ வேண்டுமென வாழ்த்தும் அவரது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!

**ஈழநாடு, அன்பு இல்லம்**
**தொடர்புகளுக்கு 416 841 9600**

# மக்களுக்கு அரசியலில் ஈடுபாடு குறைவடைந்து விட்டது - பெப்ரல்

பொதுத் தேர்தலில் 8888 வேட்பாளர்கள் போட்டியிடுகின்ற போதிலும் ஆயிரத்திற்கும் குறைவான வேட்பாளர்களே தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபட்டுள்ளனர் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளார் ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார். இது அரசியல் ஈடுபாடு குறைவடைந்துள்ளதை வெளிப்படுத்துவதோடு, மக்களிற்கு அரசியல் ஈடுபாடு குறைவடைவதை காண்பிக்கின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலில் ஈடுபடுவதால் ஏற்படும் நன்மைகள் குறித்து பொதுமக்களின் அபிப்பிராயங்கள் மாற்றமடைந்துள்ளமையும், பாரம்பரிய கட்சி கட்டமைப்பு குறித்த அதிருப்தியும் இதற்கு காரணம் என ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார். வழமையாக வாக்காளர்களை உள்வாங்குவதற்காக 6,00,000 கட்சி அலுவலகங்களை அமைப்பார்கள். ஆனால் இம்முறை 9241 கட்சி அலுவலகங்களே இயங்குகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

பொதுச் சொத்துக்கள் துஸ்பிரயோகம் போன்றவை தற்போதும் காணப்படுகின்ற போதிலும் ஆபத்தான கட்டத்தை அவை நெருங்கவில்லை. 25 வன்முறை சம்பவங்கள் பதிவாகியுள்ளன அவை ஆபத்தான கட்டத்தை அடையவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

## பொய் முறைப்பாடுகளால் திணறும் அவசர தொலைபேசி

அனுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட பின்னர் அறிமுகப் படுத்தப்பட்ட 1997 அவசர தொலைபேசி இலக்கத்திற்கு கிடைத்த நூற்றுக்கும் மேற்பட்ட முறைப்பாடுகளில் 18 முறைப்பாடுகள் மட்டுமே சரியானவை என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட தகவல்கள் பொய்யானவை எனவும் தெரிவித்தார். மேலும், இதுபோன்ற பொய்யான தகவல்களை வழங்குபவர்களுக்கு எதிராக சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்கவின் வீட்டில் சட்டவிரோதமான முறையில் வாகனம் ஒன்று இருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் அண்மையில் சோதனை நடத்தப்பட்டது. எம்.பி.யின் வீட்டில் அவ்வாறான வாகனம் எதுவும் காணப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். இதேவேளை, தூதுவர்கள், இராஜதந்திரிகள் மற்றும் பிரபல வர்த்தகர்கள் வசிக்கும் ஷங்ரிலா சொகுசு கட்டடத் தொகுதியில் வாகனம் ஒன்றில் வெடிகுண்டு இருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் கடந்த சனிக்கிழமை சோதனை நடத்தப்பட்டதாக ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். அன்றைய தினம் அவ்வாறான வெடிகுண்டு எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை என அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

(5ம் பக்கத் தொடர்ச்சி) முரண்பாடுகளுக்கு கோட்பாட்டு வேறுபாடுகளையும் விட வேறுகாரணங்களே அதிகம். ஆனால், குறைந்த பட்சம் தேர்தலில் கட்சியின் நலன்களுக்காகவேனும் ஒன்றுபட்டு நிற்பது போன்ற ஒரு 'காட்சியைக்'கூட காட்ட முடியவில்லை என்றால் தமிழ் மக்கள் தமிழ் அரசு கட்சியை எதற்காக தேர்தலில் ஆதரித்து வாக்களிக்க வேண்டும் என்பதை வாக்களிப்புக்கு இன்னமும் பத்து நாட்கள் கூட இல்லாத நிலையிலாவது அதன் தலைவர்கள் கூறுவார்களா? கட்சியின் பாரம்பரிய பெருமையை நெடுகவும் பேசிக்கொண்டிருப்பதால் எந்தப் பயனும் இல்லை. தென்னிலங்கையின் பாரம்பரிய கட்சிகளுக்கு நேர்ந்திருக்கும் கதியை தமிழ் அரசு கட்சி மாத்திரமல்ல சகல தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் ஒரு கணம் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கமலாதேவி வர்ணகுலசிங்கம்

சரவணை மேற்கு வேலணையைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை கொழும்பு 6ஐ வதிவிடமாகவும் திருமதி கமலாதேவி வர்ணகுலசிங்கம் அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாள் 08 நவம்பர் 2024 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கமலாதேவி வர்ணகுலசிங்கம் அவர்களை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அமைச்சுப் பதவிக்காக எவரும் தமிழரசுக்கட்சிக்கு வாக்களிக்கத் தேவையில்லை என்கிறார் அரியநேந்திரன்!



தமிழரசுக் கட்சியைத் தந்தை செல்வா, அமைச்சுப் பதவிகளுக்காக உருவாக்கவில்லை. அமைச்சுப் பதவிகளுக்காக தமிழர் விடுதலை கூட்டணி உருவாகவில்லை, அமைச்சுப் பதவிகளுக்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தலைவர் ஆரம்பிக்கவில்லை. எனவே, அமைச்சுப் பதவிக்காகத் தமிழரசு கட்சிக்கு எவரும் வாக்களித் தேவையில்லை என முன்னாள் ஜனாதிபதி தமிழ் பொது வேட்பாளரும், இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

அமைச்சு பதவியையிட்டு பரிசீலிக்கலாம் என இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறியிருப்பது குறித்து கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2001, தொடக்கம் 2015 வரை அனைத்து பாராளுமன்றத் தேர்தல்களில் 15, 22,15 மற்றும் 16 ஆசனங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்தன. தமிழ்த் தேசியம் உறுதிப்படுத்தப் பட்டது.

ஆனால், 2015 இல் நல்லாட்சி அரசில் 16, ஆசனங்கள் கிடைத்தன. எதிர்க் கட்சி தலைவர் பதவியும் எமக்குக் கிடைத்து. அதில் இணக்கப்பாடு அரசியல், அபிவிருத்தி அரசியல் என்று வடக்கு, கிழக்கில் எட்டு நிர்வாக மாவட்டங்களிலும் அபிவிருத்தி குழு தலைவர் பதவிகள் கிடைத்தும் பாரிய அபிவிருத்திகள் வேலை வாய்ப்புகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுத்தும் என்ன நடந்தது?

அதன் பிரதிபலிப்பு 2020, பொதுத் தேர்தலில் 16, ஆசனங்கள் 10, ஆகக் குறைந்தது, அதற்கான மூலகாரணம் அரசுடன் சோரம் போனதால் தான் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்.? சும்மா கிடந்த கஜேந்திரகுமார் சைக்கிள் கட்சிக்கு இரண்டு ஆசனமும், விக்கினேஸ்வரனுக்கு ஒரு ஆசனமும் 2020 இல் யாழ். மாவட்ட தமிழ்த் தேசிய கொள்கையுள்ளவர் வாக்களித்து எமது ஆதரவைக் குறைத்தனர் அல்லவா? அமைச்சுப் பதவிக்காக, சலுகை அரசியலுக்காக, பதவிக்காக எனில் தமிழரசு கட்சிக்கு எவரும் வாக்களிக்கத் தேவையில்லை என்றார்.

அனுரவின் திசைக் காட்டிக்கும், பிள்ளையானின் படகுக்கும், மோகனின் மாட்டுக்கும், டக்ளசின் வீணைக்கும், அங்கஜனின் தபால் பெட்டிக்கும், உமாசந்திர பிரகாஷின் ரெலிபோனுக்கும் இதர அரச கைக்கூலி கட்சிகளுக்கும் வாக்களிக்கலாம். அந்த கட்சிகளுக்கும் எமது தமிழரசுக் கட்சிக்கு வாக்களிப்பதற்கும் என்ன வித்தியாசம். சுமந்திரன் விரும்பியபடி கதைப்பதெல்லாம் மரக் கட்டைகளான சிலர் கேட்டுத் தலையாட்டலாம். ஆனால், மக்களுக்குத் தெரியும். தேர்தல் விஞ்ஞாபனம் இது வரை வெளியிடவில்லை, அஞ்சல் மூல வாக்களிப்புக்கு முன்னர் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிட முடியாமல் நாம் உள்ளோம் என்றார்.

சில வேளை, சுமந்திரன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அமைச்சுப் பதவி, அபிவிருத்திகளைப் பற்றிக் குறிப்பிட்டாலும் ஆச்சரியம் இல்லை. மட்டக் களப்பில் தமிழரசுக் கட்சிக்கு இம் முறை கட்டாயம் மூன்று ஆசனங்கள் கிடைக்கும். சுமந்திரனின் இவ்வாறான கருத்துகளால் தான் பாதிப்பு ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழ்க் கட்சிகளுடன் கூட்டணி பற்றிப் பேசவில்லை! ஜே.வி.பி.யின் டில்வின் சில்வா தெரிவிப்பு!



தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் கூட்டணி அமைப் பது தொடர்பில் எந்தவித கலந்துரையாடலும் நடத்தப்படவில்லை என ஜே.வி.பி.யின் பிரதான செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

04 நவ 2024 திங்கட்கிழமை இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் கூறியுள்ளார். ஜனாதிபதி தேர்தலில், ஐக்கிய மக்கள் சக்திக்கே ஆதரவளிக்கவுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

இதன்படி அந்த தரப்பினர் சஜித் பிரேமதாசவிற்கே ஆதரவளித்தனர். எனவே, தேர்தல் தொடர்பில் அவர்களுடன் எந்தவித கலந்துரையாடலிலும் தற்போது ஈடுபடவில்லை என டில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.




# ஜே.வி.பிக்கு இலங்கைத் தமிழரசுக்கட்சி தேர்தல் விஞ்ஞாபனம் மூலம் பதிலளிப்பு

ஜே.வி.பியின் அதிகாரப்பகிர்வு, 13வது திருத்தச்சட்டம் நிராகரிப்புக்கு மற்றும் பயங்கரவாத தடைச்சட்டம் சம்பந்தமான நிலைப்பாடு ஆகியவற்றுக்கு இலங்கைத் தமிழரசுக்கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனம் மூலம் பதிலளித்துள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றத் தேர்தல் –2024இற்கான தேர்தல் விஞ்ஞாபனம் நேற்றையதினம் யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா அரங்கில் வெளியிட்டு வைக்கப்பட்டது. குறித்த தேர்தல் விஞ்ஞாபனத்தின் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

1956, 1958, 1961, 1977, 1981 மற்றும் 1983 ஆகிய ஆண்டுகளிலும் அதனைத் தொடர்ந்து தொடர்ச்சியாகவும் தமிழ் மக்களுக்கெதிரான திட்டமிட்ட வன்முறை இனக்கலவரங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டது.

அரசு எவ்வித பாதுகாப்பையும் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு வழங்கவில்லை, இச்சந்தர்ப்பங்களில் நாட்டின் ஏனைய பாகங்களில் பாதிக்கப்பட்ட தமிழர்கள் நிலம் கடல் மற்றும் வான் வழியாக வடக்குக் கிழக்கிற்கு அன்றைய அரசாங்கங்களினால் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதன் மூலம் இவ்விரு மாகாணங்களையும் தமிழர் தம் தாயகமாகவும் அங்கு தான் தமிழர்களுக்கு பாதுகாப்பு உண்டு எனவும் அரசாங்கமே ஏற்றுக் கொண்டது ஆனால் தற்போது வடக்கு கிழக்கிலும் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பதே நிலைமை.

இவ்வேளையில் இலங்கை ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள அநுர குமார திசாநாயக்கவின் அமைச்சரவைப் பேச்சாளர் விஜித ஹேரத் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு புதிய அரசியலமைப்பின் ஊடாக தீர்வு காணப்படும புதிய அரசாங்கம் உருவாக்கப்பட்டு மக்களின் முன்னிலையில் சர்வஜன வாக்கெடுப்புக்கு சமர்ப்பிக்கப்படும் அதே நேரத்தில் மக்கள் தேசிய விடுதலை முன்னணியின் ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா 13ஆவது திருத்தச் சட்டமும் அதிகாரப் பகிர்வும் வடக்கு மக்களுக்கு அவசியமானவை அல்ல அவர்களுக்கு அவர்களின் பொருளாதார பிரச்சினைக்கே தீர்வு அவசியமாக உள்ளது.

ஆனால் தமிழ் அரசியல்வாதிகள் தங்களது அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள இந்த விடயங்களைப் பயன்படுத்தி வருகின்றனர் என்றார். இவ்வறிவிப்பையிட்டு நாம் ஆச்சரியப்படவில்லை. ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளரின் அறிவித்தலுக்கு நாம் எமது கட்சியின் தேர்தல் அறிக்கையின் மூலமாகவே பதிலளிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்குவோம் என்று இதுவரை காலமும் கூறி வந்த தேசிய மக்கள் சக்தி தற்போது தமது நிலைப்பாட்டை மாற்றியுள்ளது என்பதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். பயங்கரவாத தடுப்புச்சட்டம் முற்றாக நீக்கப்படுவதற்கு நாம் தொடர்ந்து அழுத்தம் கொடுப்போம்.

தமிழ் அரசியல் தலைமையானது தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு பெருமளவு தன்னாட்சி அதிகாரத்தினை வழங்கும் ஒரு மாற்று அரசியல் ஏற்பாட்டினை பெற காலங்காலமாக பலமுறை முயற்சி செய்தது.

அடுத்தடுத்து ஆட்சி செய்த அரசாங்கங்களுடன் பல முயற்சிகளில் ஈடுபட்டிருந்தாலும் தேசிய இனப் பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாதிருக்கின்றது.

2002 பெப்ரவரி மாதம் தமிழீழ விடுதலைப் புலிகளும் அன்றைய இலங்கை அரசாங்கமும் போர் நிறுத்த ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டதோடு 2002 டிசம்பரில் ஏற்பட்ட 'ஒஸ்லோ' உடன்படிக்கையில் சில அடிப்படைக் கோட்பாடுகளின் மீது இணக்கம் கண்டன அக்கோட்பாடு 'ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடப் பகுதிகளில் உள்ளக சுயநிர்ணய உரிமைக் கொள்கையின் பிரகாரம் சமஷ்டி கட்டமைப்பின் அடிப்படையிலமைந்த தீர்வொன்றை ஆராய்தல்' என்பதாகும்.



சர்வதேச நியமங்களின் படியும் சர்வதேச சாசனங்களின் பிரகாரமும் தமிழர்களாகிய நாங்கள் தனிச் சிறப்புமிக்க மக்கள் குழுமாமாவோம். ஒரு மக்கள் குழுமான நாங்கள் பேரினவாதத்தின் பிடிக்கு ஆட்படாது கௌரவத்துடனும் சுயமரியாதையுடனும் சுதந்திரமாகவும் அச்சமின்றியும் நாட்டின் ஏனைய மக்களுடன் சமத்துவமுள்ள மக்களாக வாழ விரும்புகிறோம்.

இதனால் தனித்துவமான மக்களாகவும் தேசிய இனமாகவும் நாம் எமது வரலாற்று ரீதியான வாழ்விடங்கள் தொடர்பிலும் எமக்குரிய எமது ஒருமித்த உரிமைகள் தொடர்பிலும் மேலும் எமது தலைவிதியை அல்லது எதிர்காலத்தை நாமே தீர்மானிப்பதற்கு எமக்கிருக்கும் உரிமை தொடர்பிலும் அதை உறுதிப்படுத்த ஒன்றுபட்டதும் பிளவுபடாததுமான இலங்கைக்குள் தமிழ் பேசும் மக்கள் வாழும் வடக்கு–கிழக்கில் தக்க தன்னாட்சி முறைமை ஒன்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் திடசங்கற்பம் கொண்டிருக்கின்றோம்.

இவை தொடர்பிலான தற்போதைய அரசியலமைப்பு ஏற்பாடுகள் பொருத்தமற்றதாகவும் திருப்தியற்றதாகவும் அமைந்துள்ளன. தற்போதுள்ள ஏற்பாடுகள் பெரும்பான்மை மக்களுக்குச் சார்பானதாகவும் அவர்களது ஆதிக்கத்தை தமிழர் மீது திணிக்கும் வகையிலுமே அமைந்துள்ளன. நீதி சமத்துவம் சமாதானம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்தும் ஓர் அரசியலமைப்புக் கட்டமைப்பின்றி பல்லின சமூகம் ஒன்றில் ஜனநாயகம் செயற்பட முடியாது.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இலங்கை அரசாங்கம் இந்திய அரசாங்கத்திடம் 13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி அதற்கு மேலாக அர்த்தமுள்ள 'அதிகாரப் பகிர்வினை கட்டியெழுப்பும்' என தொடர்ந்து உறுதிமொழி அளித்தது.

இவ்வாக்குறுதிக்கமைய 2015இல் இந்திய பிரதமர் இலங்கை பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது 'எமது சமூகத்தில் உள்ள அனைத்து பாகங்களின் அபிலாசைகளுக்கு நாம் மதிப்பளிக்கும் போது எம் நாட்டின் ஒவ்வொரு பிரஜையின் சக்தியையும் நமது நாடு உள்வாங்கிக் கொள்ளும். மாநிலங்கள் மாவட்டங்கள் மற்றும் கிராமங்களை இவ்வாறு வலுவூட்டப்படும் பொழுது நாடு மென்மேலும் மேம்படும். கூட்டுறவு சமஷ்டியில் நான் திடமான நம்பிக்கை கொண்டவன்' என்பதையும் குறிப்பிட்டார்.

இறையாண்மை என்பது மக்களிடமே உண்டு அரசிடம் அல்ல என இலங்கை தமிழரசுக் கட்சி உறுதியாக வலியுறுத்துகின்றது. தமிழ் மக்களை ஆளுகின்ற உரிமை கொழும்பிலிருக்கும் அரசாங்கத்திடம் அல்லாது தமிழ் மக்களிடமே பொதிந்திருக்கின்றது.

இதனடிப்படையில் மத்திய அரசிடமும் அதன் முகவரான ஆளுநரிடமும் அதிகாரங்களைக் குவிக்கின்ற 13ஆம் திருத்தச் சட்டம் முற்றிலும் பிழையானதொன்று. எதேச்சாதிகார அரசிற்கு விடுக்கும் அடிப்படை ஜனநாயகச் சவாலின் மீதே எமது அரசியல் சித்தாந்தம் வேரூன்றி நிற்கின்றது.

இந்த நோக்கம் நாடளாவிய ரீதியில் செயற்படுவதற்கென நாம் கடந்த 2015 ஜனவரி 8இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் எமது மாபெரும் பங்களிப்பை வழங்கியிருந்தோம். ஆகவே எமது அரசியலானது அனைத்து மக்களதும் தேவைகள் மற்றும் அரசியல் அபிலாஷைகளோடும் தமிழ் பேசும் மக்களது நீதி மற்றும் சமத்துவத்திற்கான போராட்டத்துடனும் பின்னிப் பிணைந்துள்ளது.

இந்த பின்புலத்திலேயே நாம் எதிர் வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலை எதிர் கொள்கிறோம். இந்துமா சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் இனப் பிரச்சினைக்கு உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் அரசியல் தீர்வு ஏற்படுவதற்கு இராஜதந்திரத்தை பதிலாக இந்திய நாட்டின் முக்கியத்துவமிக்க அணுகல் முறையும் இரு நாடுகளின் தமிழ்த்தேச மக்கள் இராஜதந்திரமும் செம்மையாக கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும்.

இலங்கை தமிழரசுக் கட்சி தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண அத்தியாவசியம் எனக் கருதும் கோட்பாடுகளும் பிரத்தியேக அரசியலமைப்பு ஏற்பாடுகளும் பிரதானமாக இத்தீவில் வாழும் பல்வேறு மக்களிடையே ஆட்சி அதிகாரங்களைப் பங்கிடுவதனூடாக பகிர்ந்த இறையாண்மையினை உறுதிப்படுத்தலைக் குறித்தது. உண்மையான நல்லிணக்கத்தையும் நீடித்து நிலைக்கும் சமாதானத்தையும் இலங்கை மக்கள் அனைவருக்கும் பொதுவான அபிவிருத்தியையும் எய்துவதற்குப் பின் வரும் அதிகாரப் பங்கீட்டு அடிப்படைகள் முக்கியம் பெறுகின்றன.

ஒன்றுபட்ட வடக்கு–கிழக்கு அலகைக்கொண்ட சமஷ்டிக் கட்டமைப்புக்குள்ளே அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகள் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இது வடக்குக்கிழக்கில் வாழும் எந்த ஒரு மக்கள் மீதும் எவ்வித முரண்பட்ட தாக்கத்தையும் ஏற்படுத்தா வண்ணம் இருத்தல் அவசியம்.

ஒன்றுபட்டதும் பிளவுறாததுமான இலங்கைக்குள் வன்முறையற்ற சமாதானமான வழிமுறைகளில் அமைந்த பேச்சுவார்த்தையூடாக நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

வடக்கு கிழக்கின் வரலாற்றுக் குடிகளான தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும் மேற்கொள்ளப்படும் அனைத்து அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகளினதும் நன்மைகளைப் பெற உரித்துடையவர்கள் என்றுள்ளது.

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

# உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

02 நவம்பர் 2024 - 08 நவம்பர் 2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 13வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 14வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இரத்தினம் தம்பிமுத்து

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் யாழ்.திருநெல்வேலியை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு இரத்தினம் தம்பிமுத்து அவர்களது 14வது ஆண்டு நினைவுநாள் 31 ஒக்டோபர் 2024 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு இரத்தினம் தம்பிமுத்து அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 13வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு வே.இ.இராசையா அவர்கள்

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த சமூகத் தொண்டர் திரு வே.இ.இராசையா அவர்களின் 13வது ஆண்டு நினைவு நாள் 27 ஒக்டோபர் 2024 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு இராசையா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 18வது ஆண்டு நினைவஞ்சலி



### DR.சுப்பிரமணியம் சிதம்பரப்பிள்ளை

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பளை, கந்தர்மடம், மலேசியா, லண்டன் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த முன்னாள் யாழ்ப்பாணம், கொழும்பு சட்டவைத்திய அதிகாரி Dr சுப்பிரமணியம் சிதம்பரப்பிள்ளை அவர்களது 18வது ஆண்டு நினைவு நாள் 11 நவம்பர் 2024 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு, பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். Dr சுப்பிரமணியம் சிதம்பரப்பிள்ளை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு, பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 31ம்நாள் நினைவஞ்சலி



### திரு சிவபாலன் சின்னையா

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையை பிறப்பிடமாகவும் எட்மண்டன் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சிவபாலன் சின்னையா அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 07 நவம்பர் 2024 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சிவபாலன் சின்னையா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கிருஷ்ணகுமாரி நடராஜா

மலேசியா கோலாலம்பூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் யாழ்.கந்தர்மடம், இந்தியா கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருஷ்ணகுமாரி நடராஜா அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 07 நவம்பர் 2024 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கிருஷ்ணகுமாரி நடராஜா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## நினைவழியா நினைவுகள்

### திரு பழனி கனகசபை

### திருமதி கனகசபை நாகம்மா



அனலைதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு பழனி கனகசபை, திருமதி கனகசபை நாகம்மா ஆகியோரது நினைவு நாளையொட்டி அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக 01 நவம்பர் 2024 வெள்ளிக்கிழமை கந்தசஷ்டி உபயமாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு, பழனி கனகசபை, திருமதி கனகசபை நாகம்மா தம்பதிகளை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## நினைவழியா நினைவுகள்





### திரு சுப்பிரமணியம் கந்தையா


### திருமதி பார்வதி கந்தையா

அனலைதீவு 7ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பிரமணியம் கந்தையா திருமதி பார்வதி கந்தையா இணையர்களது சிரார்த்த தினம் 29 ஒக்டோபர் 2024 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சுப்பிரமணியம் கந்தையா திருமதி பார்வதி கந்தையா இணையர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




26 ஒக்டோபர் 2024 சனிக்கிழமை யாழ்.அரியாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த லெப்.கேணல் நாதன் என்று அழைக்கப்படும் திரு கந்தையா பேரின்பநாதன் அவர்களது 28வது அண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது சகோதரி திருமதி யோகாம்பிகை இலங்கேஸ்வரன் அவர்கள் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்




26 ஒக்டோபர் 2024 சனிக்கிழமை கொக்குவிலைப பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு துரைராஜா தர்மபாலன் அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்





26 ஒக்டோபர் 2024 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சோபர் பீற்றர் ஆன் தம்பதிகளின் செல்வப்புதல்வன் எரின்டனின் 14வது பிறந்த நன்நாளாகும். அன்றைய இனிய நன்நாளில் செல்வன் எரின்டன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




27 ஒக்ரோபர் 2024 ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த சமூகத் தொண்டர் திரு வே.இ.இராசையா அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




29 ஒக்டோபர் 2024 செவ்வாய்க்கிழமை அனலைதீவு 7ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பிரமணியம் கந்தையா அவர்களதும் திருமதி பார்வதி கந்தையா தம்பதிகளதும் சிரார்த்த தினமாகும். அன்றைய தினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




31 ஒக்டோபர் 2024 வியாழக்கிழமை உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் யாழ்.திருநெல்வேலியை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு இரத்தினம் தம்பிமுத்து அவர்களது 14வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.





31 ஒக்டோபர் 2024 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சங்கர் ஜெலிசா தம்பதிகளின் செல்வப்புதல்வன் டெனன் ஈஸ்வத் சங்கரின் ஒன்பதாவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் டெனன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




01 நவம்பர் 2024 வெள்ளிக்கிழமை அனலைதீவு 1ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு பழனி கனகசபை திருமதி நாகம்மா கனகசபை இணையர்களது நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னார்களது குடும்பத்தினர் இணையர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




03 நவம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமை புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கந்தையா கதிரித்தம்பி அவர்களது முதலாவது ஆண்டு நினைவுநாளாகும். அன்றைய தினம் அன்னார்களது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




05 நவம்பர் 2024 செவ்வாய்க்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




07 நவம்பர் 2024 வியாழக்கிழமை மலேசியா கோலாலம்பூரைப் பிறப்பிடமாகவும் யாழ்.கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருஷ்ணகுமாரி நடராஜா அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




07 நவம்பர் 2024 வியாழக்கிழமை யாழ்.கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் எட்மண்டன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சிவபாலன் சின்னையா அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




07 நவம்பர் 2024 வியாழக்கிழமை சீரடிபாபா உபயமாக கனடாவில் வசிக்கும் திரு திருமதி சுதர்சன் நிவேதிகா இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




07 நவம்பர் 2024 வியாழக்கிழமை சீரடிபாபா உபயமாக கனடாவில் வசிக்கும் திரு சுப்பிரமணியம் மகாலிங்கம் குடும்பத்தினர் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




08 நவம்பர் 2024 வெள்ளிக்கிழமை சரவனை மேற்கு வேலணையைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கமலாதேவி வர்ணகுலசிங்கம் அவர்களது 10வது அண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

ஈழநாடு

# வர்த்தக தீபம் 2024
# சிறப்புற வாழ்த்துக்கள்!




தமிழர் தேசிய நினைவெழுச்சி நாள்
THE INTERNATIONAL CENTRE | இன்ரர்நஷனல் சென்ரர்
6900 Airport Road, Mississauga, Ontario L4V 1E8
மாவீரர் துயிலும் இல்லம்
மாவீரர் நாள்
நவம்பர் 27-2024 - புதன்கிழமை
எங்களுக்காகத் தமிழீழ மண்ணுக்காகத் தமிழீழத் தேசியத்துக்காகத்
தமது உயிரை ஈந்த மாவீரர்களை வணங்கும் மாபெரும் வணக்க நிகழ்வு
Tamil National Heroes Day
To Remember Our Heroes'
who Sacrificed their Life for us,
for Our Treasured Land and Tamil Nationalism
கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
ரொறன்ரோ
27-11-2024
THE INTERNATIONAL CENTRE
6900 Airport Road
Mississauga
ON L4V 1E8
கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
வழமைபோன்று ஒரே இடத்தில் மூன்று நிகழ்வுகள்
1ஆம் நிகழ்வு: காலை 7:00 மணி
2ஆம் நிகழ்வு: மதியம் 1:00 மணி
3ஆம் நிகழ்வு: மாலை 6:00 மணி
மொன்றியல்
27-11-2024
புதன்கிழமை
மாலை 5:00 மணி
Le Château Royal
3500 Bd du Souvenir,
Laval, QC H7V 1X2
ஒட்டாவா
27-11-2024
புதன்கிழமை
மாலை 5:30 மணி
Nepean Sportsplex - Hall A
1701 Woodroffe Ave,
Nepean, ON K2G 1W2
Tell: 647-619-3619 mail: ctro@tamilremembrance.com / www.tamilremembrance.com / www.facebook.cm/tamilremembrance

உ

ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா

# அருள்மிகு கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 Canada Tel: 416-321-6104 Fax: 416-321-7557 www.ayyappan.ca

Facebook: Canada Sri Ayyappan Hindu Temple

## மண்டல மகர விரத விஞ்ஞாபனம்



## ஐயப்பன் மாலை அணியும் வைபவம்

## 16-11-2024 சனிக்கிழமை

ஐயப்பன் மெய்யடியார்களே!

ஸ்காபரோ 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் மண்டல மகர விரத மாலை அணியும் வைபவம் 16.11.2024 சனிக்கிழமை அதிகாலை 7.00 மணிக்கு கணபதி ஹோமம். தொடர்ந்து சாஸ்தா ஹோமம். அதிகாலை 8.30 மணிமுதல் இரவு 8.00 மணிவரை புனித துளசிமாலை அணியும் வைபவம் இடம் பெறும்.

மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் கட்டாயம் பதிவு செய்து கொள்ளவும்.

அடியார்கள் புனிதமான ஐயப்பன் மகரமண்டல விரதகாலத்தில் பக்திசிரத்தையுடன் காலை, மாலை நடைபெறும் ஐயப்ப பூஜை விழாக்களில் கலந்து கொள்வதுடன் முடிந்த வரை மண்டலபூஜை உபயங்களைப் பொறுப்பேற்றுச் சிறப்பித்து ஐயப்ப பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அனைவரையும் அழைக்கின்றோம்.

***முக்கிய குறிப்பு: கைத்தொலைபேசியை ஆலயத்தினுள் பாவிக்க வேண்டாம்**

## MANDALA MAKARA VIRATHAM AND AYYAPPAN SACRED THULASI MALAI WEARING FESTIVAL

**Mandala Makara Viratha & Sacred Thulasi Mala Wearing Festival shall be held at canada Sri Ayyappan Hindu Temple, on Saturday, November 16, 2024 Starting with Ganapathy Homam at 7.00am, followed by Sastha Homam and Thulasi Mala Wearing from 8.30am to 8.00pm.**



***Note: Please don't use phones inside the TEMPLE**

*இறை சேவையிலுள்ள ஆலய அறங்காவலர்சபை*

# விருந்தகங்களில் வேட்பாளர்கள் தேங்காய் கியூவில் வாக்காளர்கள்?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -





மருத்துவர் அர்ஜுனா மான் கட்சியின் பெண் வேட்பாளரோடு நாகரீகமின்றி நடந்து கொண்டது ஒரு விருந்தகத்தில் ஆகும். அது தொடர்பாக ஊடகச் சந்திப்பில் கருத்து தெரிவித்த சம்பந்தப்பட்ட பெண் வேட்பாளராகிய மிதிலைச்செல்வி அந்த விருந்தகத்துக்கு தானும் உணவருந்தச் செல்வதுண்டு என்று கூறுகிறார். தனக்குத் தெரிந்தவர்களையும் அங்கு விருந்துண்ண அழைத்துச் செல்வதுண்டு என்றும் கூறுகிறார். சம்பவம் நடந்த போது அந்த விருந்தகத்தில் நிறையப் பேர் தெரிந்த ஆட்கள் இருந்ததாகவும், அவர்களில் அனேகர் ஏதாவது ஒரு கட்சியோடு தொடர்புடைய ஆட்கள் தான் என்றும் கூறுகிறார்.

அதாவது அவர் ஊடகச் சந்திப்பில் தெரிவித்த தகவல்களின்படி அர்ச்சுனாவும் உட்பட தமிழ் வேட்பாளர்களில் ஒரு பகுதியினர் அப்படிப்பட்ட உயர்தர விருந்தகங்களில் தான் உணவு அருந்துகிறார்கள். தமது ஆதரவாளர்களையும் அங்கே அழைத்துச் செல்கிறார்கள். இது முதலாவது சம்பவம்.

இரண்டாவது சம்பவம், கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்தது. யாழ்ப்பாணத்தில் ஒரு விருந்தினர் விடுதியில் தேர்தலை கண்காணிப்பதற்கான பவ்ரல் அமைப்பின் கருத்தரங்கு ஒன்று இடம் பெற்றது. தேர்தல் திணைக்களத்துக்கு நிதி அதிகாரம் வழங்குவது குறித்தும் தேர்தல்கள் தொடர்பில் மேற்கத்திய ஜனநாயகங்களில் உள்ளது போல நிரந்தரமான ஒரு நேர அட்டவணை அறிவிக்கப்பட வேண்டும் என்பது குறித்தும் கருத்துக்களைத் திரட்டுவதற்கான ஒரு கருத்தமர்வு அது.

இதில் கலந்து கொண்ட வளவாளர்கள் மற்றும் பயனாளர்கள் அனைவருக்கும் குறிப்பிட்ட தொகை பணம் வழங்கப்பட்டது. பொதுவாக அரசு சார்பற்ற நிறுவனங்களின் கருத்தரங்குகளில் அப்படித் தான், பெரும்பாலும் விருந்தினர் விடுதிகளில் நிகழ்ச்சிகளை ஒழுங்கு படுத்துவது வருகை பதிவை எடுப்பது முதலில் சிற்றுண்டியும் பின்னர் மதிய உணவும் கொடுத்து முடிவில் பயணச் செலவு என்று சொல்லி ஒரு தொகையை கொடுப்பது. இது போன்ற பெரும்பாலான கருத்தரங்குகள் ஏசி வசதி கொண்ட விருந்தினர் விடுதிகளில் தான் நடக்கும். மின்விசிறிகளைக் கொண்ட ஜன்னல்கள் திறந்து விடப்படும் சாதாரண மண்டபங்களில் நடப்பது குறைவு.

பவ்ரல் எனப்படுவது நேர்மையான முறைகேடுகளற்ற ஒரு தேர்தல் கலாச்சாரத்தை கட்டியெழுப்புவதற்காகச் செயற்படும் ஒரு சிவில் அமைப்பு. அது தனது கூட்டத்தை வளிபதன வசதி கொண்ட விருந்தினர் விடுதிகளில் நடத்துவதோடு பயனாளிகளுக்கு பணமும் கொடுக்கின்றது. அதாவது நேர்மையான தேர்தலைக் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருத்தரங்குகளுக்கு வருபவர்களை ஊக்குவிப்பதற்கு காசு கொடுக்க வேண்டியிருக்கிறதா? இது போன்ற கருத்தரங்குகளை ஏன் அரசு சார்பற்ற நிறுவனங்களின் பொதுவான வாய்ப்பாட்டுக்கு வெளியே போய் சாதாரண மண்டபங்களில் நடத்தக்கூடாது? பவ்ரல் போன்ற அமைப்புக்கள் அப்படிச் செய்யலாமென்றால், கட்சிகளும் தமது தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களுக்கு வாகனங்களை ஒழுங்குப்படுத்தி, அதில் வருபவர்களுக்கு சாப்பாடும் சிற்றுண்டியும் குடிபானமும் காசும் கொடுத்து அழைத்துக் கொண்டு வருவதில் என்ன தவறு?

தமிழ்ப் பகுதிகளில் சில கட்சிகள் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களுக்கு அழைத்துக் கொண்டு வரும் ஆதரவாளர்களுக்கு உணவு அல்லது சிற்றுண்டி, குடிபானம் என்பவற்றோடு காசும் கொடுக்கின்றன. கிட்டத்தட்ட 2500 ரூபாய் வரை கொடுக்கப்படுகிறது. தேர்தல் நாளன்று தூர இடங்களில் இருக்கும் வாக்காளர்களை வாகனம் விட்டு ஏற்றி இறக்குவதற்கும் அதாவது வாக்களிப்பதற்கும் காசு கொடுக்கப்படுகிறது. அல்லது மது கொடுக்கப்படுவதாகவும் தகவல்கள் உண்டு.

மேற்கண்ட இரண்டு சம்பவங்களையும் தொகுத்துப் பார்த்தால் என்ன தோன்றுகிறது? வேட்பாளர்களில் ஒரு தொகுதியினர் உயர்தர விருந்தகங்களில் உணவருந்துகிறார்கள். அங்கே தமது ஆதரவாளர்களையும் அழைத்துச் செல்கிறார்கள். வாக்காளர்களுக்கு அறிவூட்டும் நோக்கத்தோடு நடாத்தப்படும் கருத்தரங்குகளும் அப்படிப்பட்ட விருந்தகங்களில் தான் நடக்கின்றன. அங்கேயும் பயனாளிகளுக்கு அந்த விருந்தினர் விடுதியின் தரத்துக்கு ஏற்ப உணவு கொடுக்கப்படுகிறது. சராசரி வாக்காளர்கள் அண்ணாந்து பார்க்கும் விருந்தகங்களில் வேட்பாளர்கள் சாப்பிடுகிறார்கள். நேர்மையான தேர்தலை குறித்து வகுப்பெடுப்பவர்களும் சாப்பிடுகிறார்கள். ஆனால் சராசரி வாக்காளர்கள் எங்கே சாப்பிடுகிறார்கள்?

நட்சத்திர அந்தஸ்த்துள்ள விருந்தகங்களில் உணவருந்தும் வசதி வாய்ப்புகளைக் கொண்டிராத சராசரி வாக்காளர்கள் மந்தை மனோநிலையோடு வாக்களிக்கிறார்கள் என்று புலம் பெயர்ந்த தமிழ் அரசியல் செயற்பாட்டாளர் ஒருவர் கூறுகிறார். லண்டனில் வசிக்கும் அவர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தீவிர ஆதரவாளர். ஜனாதிபதி தேர்தலின் போது தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களித்த மக்களைக் குறித்து முகநூலில் அவர் பின்வருமாறு எழுதியுள்ளார்.. பொதுகட்டமைப்பு என்ற தற்காலிக அமைப்பு (ad hoc committee) முன்வைத்த கோசங்களுக்காக மக்கள் வாக்களித்தார்களா? அல்லது ஒரு மந்தை மனப்பாங்கில் (herding mentality) தமிழ் வேட்பாளருக்கு வாக்களித்தார்களா?

முதலாவது எனில் அரசியல் விழிப்புணர்வுமிக்க இரண்டு லட்சம் பேரை திரட்டிவிட்டீர்கள் என்று கூறுவீர்களா?''

இங்கு அவர் மந்தை மனப்பாங்கு என்று குறிப்பிட்டிருப்பது தமிழ்மக்கள் இன உணர்வின் அடிப்படையில் பொது வேட்பாளருக்கு வாக்களித்ததைத் தான். அதாவது ஒரு தமிழருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதற்காக வாக்களித்த சுமார் 2 லட்சத்து 26 ஆயிரம் மக்களும் மந்தை மந்தை மனப்பாங்கோடு வாக்களித்ததாக அவர் கூறுகிறார்.

சுமந்திரன், யாழ்ப்பாணத்தில் சஜித் பிரேமதாசாவின் மேடையில் வைத்து கூறினார், பொது வேட்பாளருக்குப் போடும் வாக்குகள் வீணாகப் போகும் வாக்குகள் என்று. அதாவது, தமிழ்ப் பொது வேட்பாளருக்கு விழுந்த இரண்டு லட்சத்து 26 ஆயிரத்துக்கும் குறையாத வாக்குகள் வீணாய்ப்போன, மந்தைத்தனமான வாக்குகளா?

ஆயின் தமிழ் வாக்காளர்களை, விமர்சன பூர்வமாக சிந்திக்கும் (Critical thinking), அரசியல் விழிப்புணர்வுமிக்க வாக்காளர்களாக வளத்தெடுப்பதற்கு எந்த ஒரு கட்சியிடமாவது ஏதாவது ஒரு பொறிமுறை உண்டா? இல்லையே? எல்லாக் கட்சித் தலைவர்களும் குருட்டு விசுவாசிகளைத் தானே அருகில் வைத்திருக்கிறார்கள்? விழிப்படைந்த தொண்டர்களை ஏன் அருகில் வைத்திருப்பதில்லை? குருட்டு விசுவாசிகளை, விமர்சனபூர்வமாக சிந்திக்கும் விழிப்படைந்த வாக்காளர்களாக மாற்றுவதற்கு கட்சிகளிடம் பொருத்தமான அரசியல் தரிசனங்களோ கட்டமைப்புகளோ இல்லை. கட்சித் தலைவர்களிடமும் அதற்குரிய கொள்ளளவு இல்லை.

இந்நிலையில் தேர்தலை புத்திபூர்வமாக அணுக முற்றப்படும் பவ்ரல் போன்ற அமைப்புகள் தமது விழிப்பூட்டும் கருத்தரங்குகளை ஏசி வசதிகளைக் கொண்ட விருந்தகங்களில் நடத்துவதை விடவும் கிராமங்களை நோக்கிச் சென்றால் என்ன? தமிழ்த்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் தேர்தல் காலத்தில் மட்டும் ஊர்களை நோக்கிச் செல்லாமல், தொடர்ச்சியாகத் தமது ஆதரவாளர்களுக்கு விழிப்பூட்டும் கூட்டங்களை நடத்தினால் என்ன?

தமிழ்க் கட்சிகள் பெரும்பாலானவை விசுவாசிகளைத் தான் கட்சி உறுப்பினர்களாக வைத்திருக்கின்றன. விமர்சன பூர்வமாக சிந்திக்கும் விழிப்படைந்த அரசியல் செயற்பாட்டாளர்களை அல்ல. விசுவாசிகள் முகநூலில் ஒருவர் மற்றவரைத் துரோகி என்பார்கள். நேற்று நண்பனாக இருந்தவர் இன்று கட்சி மாறி விட்டால் அவர் துரோகியாகி விடுகிறார். தமது கட்சித் தொண்டர்களுக்கு விழிப்பூட்டி அவர்களை அரசியல் மயப்படுத்தும் வேலை திட்டங்கள் எந்த ஒரு கட்சியிடமும் இல்லை. இந்த லட்சணத்தில் ஒரு கட்சியின் ஆதரவாளர் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களித்த மக்களை மந்தைகள் என்று கூறுகிறார்.

ஆனால் தமிழ் வாக்காளர்களை மந்தைகளாக வைத்திருக்கத் தான் பெரும்பாலான கட்சித் தலைவர்கள் விரும்புகிறார்கள். இனமான மந்தைகள் ஆயுதப் போராட்டத்தின் நேர் வாரிசுகளாகத் தங்களைக் காட்டிக் கொள்ளும் மந்தைகள் ஆயுதப் போராட்டத்தை விமர்சிப்பவர்களுக்கு துரோகி பட்டம் சூட்டி அதன் மூலம் தங்களைத் தியாகிகளாகக் காட்டிக் கொள்ளும் மந்தைகள் சாராயப் போத்தலுக்கு வாக்களிக்கும் மந்தைகள் காசு கொடுத்துப் பேருந்துகளில் ஏற்றுக் கொண்டு வரப்படும் மந்தைகள் முகநூலில் நேரலையில் தோன்றும் மருத்துவரை நம்பிக் காசை விசுக்கும் மந்தைகள் போன்ற எல்லா எல்லாவகை மந்தைகளையும் குருட்டு விசுவாசிகளையும் மேய்க்கத் தான் எல்லாக் கட்சிகளும் விரும்புகின்றன.

வாக்காளர்களை மந்தை மனோநிலையில் இருந்து விடுவித்து அரசியல் விளக்கமுடைய விழிப்படைந்த வாக்காளராக மாற்றுவதற்கு எந்தக் கட்சியாவது தயாரா? அல்லது எந்த என்.ஜி.யோவாவது தயாரா?

## 29வது நாள் நினைவஞ்சலி




### திருமதி காமினி சூரியமூர்த்தி

யாழ்.ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி காமினி சூரியமூர்த்தி அவர்களின் 29வது நாள் நினைவு நாள் 10 நவம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி காமினி சூரிமூர்த்தி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# புலனாய்வுத் தவறா?

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



அறுகம்பையில் இஸ்ரேலிய சுற்றுலா பயணிகளை இலக்கு வைத்து தாக்குதல் நடத்த திட்டமிட்டதாக, இது வரை 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றனர். அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்படாமல் பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் உத்தரவின்படி, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ், 90 நாட்களுக்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இவ்வாறான ஒரு திட்டம் இருந்தது என்பதும், அதனை சார்ந்தவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், இன்னும் கைது செய்யப்படப் போகிறார்கள் என்பதும், நீதிமன்றத்தில் பொலிஸ் தரப்பு முன் வைத்திருக்கின்ற அறிக்கை உறுதி செய்கின்றது.

எனவே அறுகம்பையில் இஸ்ரேலிய சுற்றுலா பயணிகள் தாக்கப்படும் ஆபத்து இருக்கவில்லை, இது வெறும் புரளி என்று கூறப்பட்டு வந்த கதைகள், பொய்யாகி இருக்கின்றன. நெருப்பில்லாமல் புகை வராது. அது போலத் தான், இந்த விவகாரத்தை குறைத்து மதிப்பிடவோ மிகையாக மதிப்பிடவோ முடியாது. இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய அறிவிப்பு, அமெரிக்காவினாலும் அதனை தொடர்ந்து ஆறு நாடுகளாலும் வெளியிடப்பட்டிருக்கின்ற சூழல், சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடிய விடயம் அல்ல. இந்தச் சூழலுக்கு பிரதான காரணம், புலனாய்வு செயற்பாடுகளில் இருந்த போதாமை தான்.

ஒன்று உள்நாட்டுப் புலனாய்வு அமைப்புகளால் இந்த அச்சுறுத்தல்களை கண்டறிய முடியவில்லை. இரண்டு வெளிநாட்டு புலனாய்வு அமைப்புகள் எச்சரிக்கை செய்திருந்த போதும், ஆரம்பக் கட்டத்திலேயே சந்தேகநபர்களை இனங் காண முடியவில்லை. மூன்று இந்திய புலனாய்வு அமைப்பு தகவல்களை வழங்கும் வரை, யாரையும் கைது செய்யக் கூடிய நிலை இருக்கவில்லை. நான்கு அமெரிக்கப் புலனாய்வு அமைப்பான எவ்.பி.ஐ. முன்னெச்சரிக்கை கொடுத்திருந்திருந்த போதும், அதனை அடிப்படையாக வைத்து சுற்றுலா பயணிகளை பாதுகாக்கும் நடவடிக்கைகளை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இந்த நான்கு பிரதான விடயங்களும் புலனாய்வு சார்ந்த தவறுகள் அல்லது பிரச்சினைகள் அல்லது போதாமை குறித்து அரசாங்கத்துக்கு சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறது. தாக்குதல் இலக்காக இருந்தது உள்நாடு. தாக்குதலுக்கு திட்டமிட்டவர்களும் உள்நாட்டவர்கள். ஆனால் உள்நாட்டு புலனாய்வு அமைப்புக்களால் அதை கண்டறிய முடியவில்லை. இது தான் சிக்கலான விடயம்.

அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் இந்த தாக்குதல் திட்டம் குறித்து தமது நாடு, முன்னரே புலனாய்வு எச்சரிக்கையைக் கொடுத்திருந்ததாக கூறியிருக்கிறார். மூன்று அல்லது நான்கு வாரங்களுக்கு முன்னரே புலனாய்வு தகவல்கள் கிடைத்திருந்த போதும், அதனை அடிப்படையாக வைத்து விசாரணைகளை முன்னெடுத்து, சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு இருக்க வேண்டும். இன்னொரு பக்கத்தில், சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

அதற்கு அப்பால் சம்பந்தப்பட்ட நாடுகளுடன் கலந்துரையாடி சுற்றுலா பயணிகளுக்கு உள்ள ஆபத்தை புரிய வைக்கவும் அல்லது அவர்களை அதிலிருந்து காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடவும் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இந்த மூன்றும் நிகழ்ந்திருக்கவில்லை. அமெரிக்கா இந்த பயண எச்சரிக்கையை பகிரங்கமாக வெளியிட்டதற்கு இது தான் காரணம்.

இலங்கை அரசாங்கம் தமது புலனாய்வு அறிக்கையை கவனத்தில் கொள்ளவில்லை, அதனடிப்படையில் மேலதிக நடவடிக்கை எடுக்கவில்லை என்று அமெரிக்கா கருதியிருக்கிறது.

இலங்கை பாதுகாப்பானதாக இருக்க வேண்டும் என்பதில் அமெரிக்காவுக்கு



அதிக அக்கறை இருக்கிறது. ஏனென்றால் இலங்கை – இந்தியப் பெருங்கடல் பாது காப்பு திட்டத்தில், குறிப்பாக திறந்த வெளிப்படையான இந்தோ–பசுபிக் என்ற அமெரிக்காவின் மூலோபாயத்தில் முக்கியமான பங்காளியாக இலங்கையை வைத்திருக்க விரும்புகிறது. அதன் அடிப்படையில் தான், இலங்கைக்கான அத்தனை உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தியா, சீனா, ரஷ்யா போன்ற சர்வதேச வல்லரசுகள் செல்வாக்கு செலுத்தக் கூடிய, இலங்கைத்தீவு, புகோள அரசியல் முக்கியத்துவம் கொண்டது என்பதால், அமெரிக்கா இதனை உன்னிப்பாக கண் காணிக்கிறது. இலங்கையின் பாதுகாப்பில், அரசியலில் பாதிப்புகள், பொருளாதாரத்தில் ஏற்படக் கூடிய பாதிப்புகள் எல்லாமே ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாக பூ கோள அரசியல் வகிபாகத்தில் தாக்கத்தை செலுத்தக் கூடியதாக இருக்கும் என்று அமெரிக்கா நம்புகிறது.

அப்படிப்பட்ட நிலையில், இலங்கையில் பாதுகாப்பற்ற நிலை ஏற்படுமானால், அதனை சாட்டாக வைத்துக் கொண்டு பல்வேறு நாடுகள் அல்லது புலனாய்வு அமைப்புகள், பாதுகாப்பு கட்டமைப்புகள் இலங்கையில் மீது கவனம் செலுத்தவும் இலங்கைக்குள் மூக்கை நுழைக்கவும் காரணமாகி விடும் என அமெரிக்கா கருதுகிறது.

இதுபோன்ற காரணங்களை வைத்துக் கொண்டு, பிற நாடுகள் இலங்கைக்குள் காலடி எடுத்து வைத்து விடக் கூடாது என்பதாகவே இலங்கை கடற்படை, விமானப் படையினருக்கு பயிற்சி அளிப்பது, உதவிகளை வழங்குவது, பாதுகாப்பு உபகரணங்கள், போர்க்கப்பல்கள், விமானங்களை வழங்குவது என்பன போன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. அமைதியான இலங்கையை எதிர் பார்க்கும் அமெரிக்காவுக்கு, அதற்கான சூழல் சீரழிந்து போவதை சகித்துக் கொள்ள முடியவில்லை.

இந்த நிலையில் தான் பயண எச்சரிக்கை ஒன்றை வெளியிட்டு உறங்கிக் கொண்டிருந்த இலங்கை அரசாங்கத்தை பரபரப்புக்குள் தள்ளி விட்டிருக்கிறது. இதற்குப் பின்னர் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் சிலர் கைது செய்யப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதன் மூலமாக பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு விட்டதாக அனுமானிக்க முடியும். இதற்கு மேலும் பாதுகாப்பை பலப்படுத்தாமல் விட்டிருந்தால், ஏதேனும் ஒரு அசம்பாவிதம் நிகழுமேயானால், அநுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கத்தினால் தப்பிப் பிழைக்கவே முடியாது.

2019 ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்கு பின்னர் மைத்திரிபால சிறிசேனவும், அவரது அரசாங்கமும் புலனாய்வு தகவல்களை கோட்டை விட்டு விட்டு, எத்தகைய நெருக்கடியை எதிர்கொண்டார்களோ, அது போன்ற நிலைக்கு தள்ளப்படுவார்கள்.

எனவே இப்போதைக்கு இலங்கை அரசாங்கமும் புலனாய்வு அமைப்புகளும் அதிக பட்சம் பணியாற்ற முனைவது ஆச்சரியமல்ல.

அப்படியானால் இலங்கையின் புலனாய்வு அமைப்புகள் பலவீனமான நிலையில் இருந்தனவா என்ற கேள்வியும் இப்போது எழுப்பப் படுகிறது. ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்கு பிறகு புலனாய்வு அமைப்புகள் மீதான விமர்சனங்கள் அதிகரித்தது. நாட்டை பாதுகாக்க புலனாய்வு அமைப்புகளை வலுப்படுத்த கோட்டாபய ராஜபக்ஷவினால் மாத்திரமே முடியும் என்று கூறியே அவரை ஆட்சிக்கு கொண்டு வந்தார்கள்.

அவரும் கூட அதிகாரத்தை பெற்றுக் கொண்டு, படைக் கட்டமைப்புகளையும், புலனாய்வு அமைப்புகளையும் வலுப்படுத்தி விட்டதாக அறிவித்திருந்தார்.

அவ்வாறு வலுப்படுத்தப்பட்ட புலனாய்வு அமைப்பு, இப்போதும் கூட, சரியாக செயற்படுகின்றது என கூற முடியாத நிலையே காணப்படுகிறது. அறுகம்பே விவகாரம் அதற்கு ஒரு உதாரணம். ஏற்கனவே, புலனாய்வு அமைப்புகளை வலுப்படுத்தியதாக அறிவித்த கோட்டாபய ராஜபக்ஷவே, பதவியிழந்த பின்னர், எழுதிய நூலில், தமக்கு எதிரான அரசியல் கிளர்ச்சியின் போது, புலனாய்வு அமைப்புகள் சரியாகச் செயற்பட்டிருக்கவில்லை என்று குறிப்பிட்டிருந்தார்.


அறுகம்பே விடயத்தில், புலனாய்வுத் திறனுக்கும் அப்பாலும் இன்னமும் சில விட யங்கள் இருப்பதாகத் தெரிகிறது. புலனாய்வு அமைப்புகளுடன் குறிப்பாக, சர்வதேச புலனாய்வு அமைப்புகளுடன் சர்வ தேச நாடுகளுடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது இத்தகைய சந்தர்ப்பத்தில் அவசியமானது.

அத்தகைய உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளாததும், அநுரகுமார அரசாங்கம் குறுகிய காலத்தில் நெருக்கடி நிலையை எதிர் கொள்வதற்குக் காரணமாக சொல்லப்படுகிறது. ரணில் விக்கிரமசிங்க ஆட்சியின் போது ஹமாஸ் மீதான இஸ்ரேலின் தாக்குதல் தொடங்கப்பட்ட போதும், இதேபோன்ற ஒரு அச்சுறுத்தல் எதிர்பார்க்கப்பட்டதாக இப்போது தகவல் கசிந்திருக்கிறது.

அப்போது பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக இருந்த பிரமித்த பண்டார தென்னக்கோன் இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறார். அந்த அச்சுறுத் தலை அடுத்து, இஸ்ரேலிய அரசாங்கத்துடன் பேசி, இங்கிருந்த இஸ்ரேலியர்களை விசேட விமானத்தில் அனுப்பி வைத்ததாக, அவர் தகவல் வெளியிட்டிருக்கிறார். இது இப்போது தான் வெளியாகியுள்ள தகவல்.

இஸ்ரேலுக்கும் இலங்கைக்கும் இருந்த நெருங்கிய ஒத்துழைப்பின் மூலம் அது சாத்தியமானது. இப்போது அத்தகைய ஒத்துழைப்பு இல்லை என்பதை, தனியே பிரமித்த பண்டார தென்னக்கோன் மாத்திரம் குறிப்பிடவில்லை. சரத் வீரசேகரவும் கூறியிருக்கிறார். உதய கம்மன்பிலவும் கூறி இருக்கிறார். புதிய அரசாங்கம் தான் வரைந்த வட்டத்துக்குள் இருந்து கொண்டு, எல்லாப் பிரச்சினையும் தீர்க்கலாம் எதிர்பார்க்கிறது. என அந்த வட்டத்தை தாண்டி வெளியே வந்தால் தான்.பிரச்சினையை தீர்க்கும் வல்லமை கிடைக்கும் என்பதை இலங்கை அரசாங்கம் விரைவிலேயே புரிந்து கொள்ளும்.

## 28வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு முத்தர் இரத்தினம்

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு முத்தர் இரத்தினம் அவர்களது 28வது ஆண்டு நினைவு நாள் 11 நவம்பர் 2024 திங்கட்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் முத்தர் இரத்தினம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சின்னம்மா வடிவேலு

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் நுவரெலியாவை வதிவிடமாகவும் சிக்காக்கோ அமெரிக்காவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சின்னம்மா வடிவேலு அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 08 நவம்பர் 2024 வெள்ளிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சின்னம்மா வடிவேலு அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# பல்கலைக்கழக மாணவர்களின் பொறுப்புக் கூறலும் அரசியற் கடப்பாடும்

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



தமிழரின் வாக்குகள், தமிழ்த் தரப்புகளுக்கே அளிக்கப்பட வேண்டும். மாறாகத் தென்னிலங்கைத் தரப்புகளுக்கு அளிக்கக் கூடாது என்று திருவாய் மலர்ந்திருளியிருக்கின்றனர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இப்படியொரு அறிவிப்பை விடக் கூடுமென்றால் நாங்கள் மட்டுமென்ன குறைந்தவர்களா, என்று கிளம்பிய கிழக்குப் பல்கலைக்கழகத்தின் (மட்டக்களப்பு) கலைத்துறை மாணவர்கள், இதே தொனியில் இன்னொரு அறிவிப்பை விட்டுள்ளனர்.

இந்த அறிவிப்போடு இரண்டு தரப்பினரும் தங்களுடைய தேசியக் கடமையையும் இனப் பொறுப்பையும் நிறைவேற்றிக் கொண்டனர். இனி இன்னொரு தேர்தலோ அல்லது வேறொரு நிகழ்ச்சியோ வரும் போது ஊடக நிலையத்துக்கு வந்து இன்னொரு அறிக்கையை விட்டு வரலாற்றுச் சாதனையை நிறைவேற்றிக் கொள்வார்கள். வரலாற்றுச் சாதனைக்கு இதை விட வேறு என்ன செய்ய வேண்டும்?

இது இந்த மாணவர்களின் அரசியல் சாதனையென்றால், இந்த ஊடக அறிக்கை ஏதோ வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்ற எண்ணத்தில் நம்பிக்கையில் இதை வலு கவனமாகக் காவிக் கொண்டு வந்து, தங்களுடைய ஊடகங்களிலும் இணையப் பக்கங்களிலும் நிரப்பிக் கொண்டனர் ஊடகவியலாளர்கள்.

இதொன்றும் புதிய சங்கதியே இல்லை. வழமையாகத் தேர்தலின் போது நடக்கின்ற திருவிளையாடல் தான். முன்பு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று சொல்லப்படுவதுண்டு. இப்பொழுது அப்படிச் சொல்ல முடியாது. கூட்டமைப்புக் காணாமற் போய் விட்டது. பதிலாக தமிழ்த்தேசியம் என்ற பெயரில் பத்துப் பன்னிரண்டு மஞ்சள் சிவப்புக் கட்சிகளும் குழுக்களும் களத்தில் நிற்கின்றன. இப்படிப் பத்துப் பன்னிரண்டு அணிகளாகப் பிரிந்து நின்றால் அதில் எதைத் தேர்வு செய்வது? எந்தத் தரப்புக்கு ஆதரவளிப்பது? என்று முடிவெடுக்க முடியாது.

அதனால் தமிழரின் வாக்குகள், தமிழ்த் தரப்புகளுக்கே அளிக்கப்பட வேண்டும். மாறாகத் தென்னிலங்கைத் தரப்புகளுக்கு அளிக்கக் கூடாது என்று மிகச் சாதுரியமாக, ஒரு அறிவிப்பை விடுத்திருக்கின்றனர், இந்த மாணவர் தலைவர்கள்.

இப்படிப் பொத்தாம் பொதுவாக அறிவிப்பைச் செய்தால் யாரோடும் எந்தத் தரப்போடும் நேரடியாகப் பகைத்துக் கொள்ள வேண்டியதில்லை. அதே வேளை இனப்பற்றோடும் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டோடும் தாம் உள்ளதாகவும் காட்டிக் கொள்ளலாம். அப்பப்பா, எவ்வளவு சாதுரியமான செயலிது? எப்படித் திறமையான இராஜதந்திரம்? உண்மையில் இது மிகத் தவறான ஏற்றுக் கொள்ளவே முடியாத செயலாகும்.

ஏனென்றால், கடந்த 15 ஆண்டுகளாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும் செயற்பாடற்ற அறிக்கை விடுநர்களாகவே உள்ளனர். (இதை விட வேறு எப்படித்தான் அவர்களால் செயற்பட முடியும்? ஏனென்றால், இந்த மாணவர்களின் வியப்புக்குரிய தலைவர்களாக இருப்போரும் அறிக்கைப் புலிகளாகத் தானே உள்ளனர்!

எனவே தலைவர்கள் எப்படியோ அப்படியே மாணவர்களும்' என்கிறார் நண்பர் ஒருவர்.) அப்படி விடப்படுகின்ற அறிக்கைகள் கூட யதார்த்தம், நடைமுறை, சமூக நிலவரம், அரசியற் சூழல் என எதைப்பற்றிய புரிதலுமற்றனவாகவே இருக்கின்றன. நீண்டதொரு விடுதலைப் போராட்டத்தை நடத்தி அதில் வெற்றியடைய முடியாமற் போன பாதிப்புகளோடும் இழப்புகளோடுமிருக்கும் ஒரு சமூகத்தின் தலைவிதியைத் தீர்மானிக்கும் அரசியல் நடவடிக்கைகளில் பல்கலைக்கழக மாணவர்களின் பங்கு பெரியது. பொறுப்புமிக்கது.

அதன்படி போராடிய மக்களை ஏற்பட்ட பாதிப்பிலிருந்து மீட்டெடுக்கும் பணிகளில் இணைந்து பணியாற்றியிருக்க வேண்டும். அவர்களுடைய துயரங்களை ஆற்றுப்படுத்தியிருக்க வேண்டும். அவர்களுடைய வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கான பணிகளில் பங்களிப்புச் செய்திருக்க வேண்டும். அவர்களுடைய பிரதேசங்களை மீள்நிலைப்படுத்தும் அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்திருக்க வேண்டும். கல்வி வளர்ச்சிக்குத் தாராளமாக உதவியிருக்க வேண்டும். பொதுவாகச் சமூக, பொருளாதார, பண்பாட்டு மீள்நிலைக்கும் வளர்ச்சிக்கும் ஆதரவளித்திருக்க வேண்டும். ஆக இவற்றுக்காகக் களப் பணிகளை ஆற்றியிருப்பது அவசிய மாகும்.




பல்கலைக்கழகத்தில் மாணவர்களாக இருக்கும்போது மட்டுமல்ல, பட்டம் பெற்று வெளியேறிய பிறகும் கூட இதைத் தொடர்ந்திருக்க முடியும். மட்டுமல்ல 'உளவியல் ரீதியாக உங்களோடு நிற்கிறோம்' என ஆதரவு நிலையைக் காண்பித்திருக்கலாம். போரிலே பாதிக்கப்பட்டோரில் மிகக் கூடிய தாக்கத்துக்குள்ளாகியோர் உளப் பாதிப்புக்கு (Trauma) உள்ளானோரே. ஆகவே இவர்களை ஆற்றுப்படுத்தும் பணியில் நிச்சயமாக இந்த மாணவர்கள் ஈடுபட்டிருக்க வேண்டும். தங்களுடைய கல்வித்துறையின் மூலமாக சமூக, பொருளாதார, பண்பாட்டு, மருத்துவ, அரசியல் ஆய்வுகளைச் செய்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தாலே அது பெரியதொரு வரலாற்றுப் பணியாக இருந்திருக்கும். அதில் பெற்ற புள்ளி விவரங்கள், உண்மையான நிலவரங்களை உள்ளடக்கிய தகவல்கள் — தரவுகளின் மூலமாகத் தமிழ்ச் சமூகத்தைப் புதிய தளமொன்றுக்கு நகர்த்தியிருக்க முடியும். கூடவே இவற்றின் மூலம் சர்வதேச ரீதியாக அரசியலிலும் மனித உரிமைகள், மனிதாபிமானப் பணிகளிலும் பெரும் செல்வாக்கையும் பேராதரவையும் பெற்றிருக்க முடியும்.

ஆனால் அப்படி எதுவுமே நடக்கவில்லை. அதில் எந்த மாணவர் ஒன்றியத்தினரும் கரிசனை கொள்ளவில்லை. ஆகச் செய்ததெல்லாம் நினைவு கூரல்களில் பங்கெடுத்ததும் தேர்தல்களுக்கு அறிக்கை விடுத்ததும்தான். அதாவது நோகாமல் போராட்டப் பங்களிப்பைச் செய்வதாகக் காண்பித்ததேயாகும்.


பட்டம் பெற்று வெளியேறிய பிறகு, 'மாணவர் ஒன்றியமும் கத்தரிக்காயும்' என்று அந்த லேபிளைத் தூக்கியெறிந்து விட்டு, வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தை ஆரம்பித்து அரசசார்பு அரசியல்வாதிகளின் காலடியில் நின்ற நிற்கின்ற வரலாறே மாணவர்கள் தலைவர்களுடையது. சிலர் இப்பொழுது தாங்களும் வேட்பாளர்களாக அரசியலில் குதித்துள்ளனர். ஆனால், தெற்கிலே, சிங்களத்தரப்பின் நிலைமை வேறு. அவர்கள் அங்கே மாணவப் பருவத்தைப் புரட்சிகர சமூக உருவாக்கத்துக்காகவே பெரும்பாலும் பயன்படுத்துகிறார்கள். மக்கள் போராட்டங்களை நடத்துகிறார்கள். அரசுக்கும் அதிகார வர்க்கத்துக்கும் எதிராகப் போராடுகிறார்கள். முக்கியமாக அறிவுபூர்வமாகச் செயற்படுகிறார்கள். இதற்கொரு பெரிய பாரம்பரியமே அவர்களுக்குண்டு. அங்கே மாணவர்களுடைய சிற்றுண்டிச் சாலைக்கோ விடுதிக்கோ சென்றால் தெரியும், அவர்களுடைய உள நிலையையும் போராட்டத் தன்மையையும் சமூக அக்கறையையும். அதனுடைய ஒரு வெளிப்பாடே அரகலய. அதன் தொடர்ச்சியே தற்போது நடந்து கொண்டிருக்கும் மாற்றத்துக்கான அரசியல் (Politics of change or systemchange).

இப்பொழுது மட்டுமல்ல, தெற்கின் (சிங்கள) மாணவர்களுடைய பாரம்பரியம் என்பது எப்போதும் புரட்சிகரமானதாக யதார்த்தத்தை நோக்கியதாகவே இருந்திருக்கிறது. என்பதால் தான் அவர்கள் தொடர்ந்தும் அரசியல் மாற்றங்களை நிகழ்த்தி வந்திருக்கிறார்கள். அல்லது அதற்கு ஆதரவாக இருந்திருக்கிறார்கள். அந்த மாற்றங்கள் முழுமையடையாதிருக்கலாம். ஆனால், ஒரே கட்சியோ, ஒரே தலைமையோ தொடர்ந்தும் ஆட்சி அதிகாரத்தில் இருந்ததில்லை. அதற்கு அவர்கள் அனுமதித்ததும் இல்லை.

இங்கே எழுபது, எண்பது ஆண்டுகளாக ஒன்றுக்கும் உதவாத கட்சிகள் தானிருக்கின்றன. அவை சிதைந்தாலும் பழைய குப்பைகள், ஓட்டை ஒடிசல்கள் என்ற நிலையை எட்டினாலும் தமிழர்களுக்கு அவை தூண்டாமணி விளக்குகள் என்பதேயாகும். மாற்றத்தையோ புதிதையோ எளிதில் ஏற்காத, அங்கீகரிக்காத, நம்பத் தயாரில்லாத ஒரு சமூகாகவே இருக்கிறது. மக்கள் அப்படியிருந்தால் பரவாயில்லை. மாணவர்கள், இளைய தலைமுறையினர், (22ம் பக்கம் பார்க்க)



# Friends MATRIMONY



www.friendsmatrimony.com
+1 647 709 1761 | +1 647 709 1536
+1 647 700 7208 | +1 416 477 6854
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2



## மணமகள்

**ID08120036** (F)
32yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Masters Degre , Academic Advisor , Canada

**ID08119833** (F)
32yrs, 5'4" , Single , Aayilyam , 4 Sevai , Diploma , Pharmacy Technician , Canada

**ID08118630** (F)
30yrs, 5'4" , Single , Uthirattathi , N/A Sevai , Bachelors.. , Case Management.. , Canada

**ID08117127** (F)
42yrs, 6' , Divorced , Avittam , 1 Sevai , Masters Degree , Auditor , Canada

**ID08120581** (F)
29yrs, 5'4" , Single , Thiruvaathirai , 6 Sevai , Ph.D , Senior Engineer , United States

**ID08120471** (F)
32yrs, 5'9" , Awaiting Divorce , Not Specified , N/A Sevai , Masters Degree , IT Project.. , Singapore

**ID08120453** (F)
31yrs, 5'4" , Single , Poorattathi , N/A Sevai , Masters Degree , Senior Manager , Canada

**ID08120442** (F)
28yrs, 5'7" , Single , Moolam , 12 Sevai , Bachelors.. , Goverment.. , Canada

**ID08120391** (F)
28yrs, 5'2" , Single , Thiruvonam , N/A Sevai , Bachelors.. , Service Support.. , Canada

**ID08120320** (F)
29yrs, 5'4" , Single , Kettai , 4 Sevai , Bachelors.. , Finance Professional , Canada

**ID08120054** (F)
34yrs, 5'5" , Divorced , Rohini , 4 Sevai , Diploma , Farmacy Technician , Canada

**ID08119833** (F)
32yrs, 5'4" , Single , Aayilyam , 4 Sevai , Diploma , Pharmacy Technician , Canada

**ID08119603** (F)
33yrs, 6'4" , Single , Makam , 10 Sevai , Bachelors.. , Software Engineer , Canada

**ID08119509** (F)
28yrs, 5'4" , Single , Visaakam , 7 Sevai , Bachelors.. , Secretary , Canada

**ID08115839** (F)
30yrs, 5'5" , Single , Visaakam , N/A Sevai , Bachelors.. , Human Resource.. , Canada

**ID08115124** (F)
40yrs, 5'2" , Single , Uthiraadam , N/A Seva , Bachelors.. , Pharmacist , New Zealand

**ID08115839** (F)
30yrs, 5'5" , Single , Visaakam , N/A Sevai , Bachelors.. , Human Resource.. , Canada

**ID08120732** (F)
30yrs, 5'6" , Single , Chithirai , 7 Sevai , Masters Degree , Doctor , Sri Lanka

**ID08120728** (F)
40yrs, 5'4" , Widowed , Not Specified , N/A Sevai , High School , Teacher , Canada

**ID08120727** (F)
24yrs, 4'5" , Single , Avittam , 3 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08120723** (F)
41yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , House of Nursing , Malaysia

**ID08120722** (F)
32yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Nurse , Sri Lanka

**ID08120721** (F)
23yrs, 5'2" , Single , Punarpoosam , N/A Sevai , Bachelors.. , Study , Sri Lanka

**ID08120718** (F)
29yrs, 5'5" , Single , Chithirai , 10 Sevai , Masters Degree , Assistant.. , Canada

**ID08120711** (F)
30yrs, 5'3" , Single , Bharani , N/A Sevai , Bachelors.. , Executive , Sri Lanka

**ID08120695** (F)
28yrs, 5'4" , Single , Swaathi , 5 Sevai , Bachelors.. , Financial. , Canada

**ID08120685** (F)
22yrs, 5'4" , Single , Uthirattathi , N/A Sevai , Bachelors.. , Student Canada

**ID08120675** (F)
29yrs, 5'4" , Single , Pooram , N/A Sevai , Bachelors.. , Student , Sri Lanka

**ID08120667** (F)
25yrs, 5'1" , Single , Thiruvaathirai , N/A Sevai , High School , Home , Sri Lanka

**ID08120650** (F)
26yrs, 4'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Law student ,Sri Lanka

## மணமகன்



**ID08120717** (M)
33yrs, 5'8" , Annulled , Thiruvonam , 6 Sevai , Bachelors.. , Financial. , Canada

**ID08120715** (M)
27yrs, 5'8" , Single , Chathayam/sadayam , 8 Sevai , Bachelors.. , Assistant.. , Canada

**ID08120709** (M)
38yrs, 5'4" , Single , Hastham , 6 Sevai , Diploma , CNC Machine.. , Canada

**ID08120673** (M)
35yrs, 5'11" , Single , Swaathi , 12 Sevai , Diploma , Business Owner , Canada

**ID08120642** (M)
45yrs, 5'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Physicians.. , Canada

**ID08120616** (M)
33yrs, 5'5" , Single , Bharani , 11 Sevai , Bachelors.. , Insurance.. , Canada

**ID08120613** (M)
32yrs, 5'7" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Engineer Canada

**ID08120474** (M)
28yrs, 5'7" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , AGM , Sri Lanka

**ID08120335** (M)
30yrs, 5'7" , Single , Revathi , 4 Sevai , Diploma , Business-.. , Canada

**ID08117127** (M)
42yrs, 6' , Divorced , Avittam , 1 Sevai , Masters Degree , Auditor , Canada

**ID08113686** (M)
45yrs, 5'7" , Single , Pooram , 2 Sevai , Diploma , Staff- Air.. , Canada

**ID08120639** (M)
35yrs, 5'6" , Single , Makam , 8 Sevai , Bachelors.. , Own Bussiness , United States

**ID08120583** (M)
32yrs, 5'10" , Single , Poorattathi , 9 Sevai , Bachelors.. , Project Engineer , Canada

**ID08120564** (M)
33yrs, 5'11" , Single , Hastham , 8 Sevai , Bachelors.. , Website Administrator ,Canada

**ID08120356** (M)
30yrs, 6' , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Engineer Electric , Canada

**ID08120270** (M)
34yrs, 5'8" , Single , Thiruvaathirai , 10 Sevai , Bachelors.. , Data Analyst , Canada

**ID08120144** (M)
35yrs, 5'9" , Single , Visaakam , 8 Sevai , Diploma , Own Business.. , Canada

**ID08119698** (M)
33yrs, 6'4" , Single , Makam , 10 Sevai , Bachelors.. , Software Engineer , Canada

**ID08120481** (M)
30yrs, 5'7" , Single , Poorattathi , 7 Sevai , Bachelors.. , Research Associate , Canada

**ID08116778** (M)
37yrs, 5'9" , Single , Uthiram , 12 Sevai , Bachelors.. , Manager Financial.. , Canada

**ID08116404** (M)
43yrs, 5'4" , Single , Makam , N/A Sevai , High School , Business , Sri Lanka

**ID08115828** (M)
31yrs, 5'9" , Single , Mrigasheersham , 10 Sevai , Bachelors.. , Trading Associate , Canada

**ID08111978** (M)
45yrs, 5'5" , Single , Anusham , 2 Sevai , High School , Magna INC , Canada

**ID08120734** (M)
35yrs, 5'7" , Seperated , Not Specified , N/A Sevai , Masters Degree , Fama prodecsoen.. , Sri Lanka

**ID08120733** (M)
29yrs, 5'7" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Research Technician , United States

**ID08120731** (M)
33yrs, 6' , Single , Uthiram , N/A Sevai , Postgraduate.. , HDFC bank.. , Sri Lanka

**ID08120730** (M)
28yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Engineering ,Sri Lanka

**ID08120729** (M)
32yrs, 5'7" , Single , Kettai , 10 Sevai , Bachelors.. , Quantity Surveyor , United Arab Emirates

**ID08120724** (M)
30yrs, 5'9" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Senior engineer , Sri Lanka

**ID08120720** (M)
35yrs, 5'5" , Single , Kettai , N/A Sevai , Masters Degree , Teacher , Sri Lanka

# தமிழ்மக்கள் மத்தியில் அனுர அலை தணியத் தொடங்கி விட்டதா?

மிகக் குறுகிய காலத்துக்குள் தமிழ் பகுதிகளில் அனுர அலை தணியத் தொடங்கி விட்டதா? அண்மை வாரங்களில் இடம் பெற்று வரும் சில விடயங்கள் தமிழ் மக்களில் ஒரு பகுதியினரின் மத்தியில் ஜேவிபிக்கு இருந்த கவர்ச்சியைக் குறைக்கத் தொடங்கி விட்டன.

முதலாவதாக கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவராகிய ரில்வின் சில்வா இனப்பிரச்சினை தொடர்பாகத் தெரிவித்த கருத்துக்கள்.

இரண்டாவது, பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பான நிலைப்பாடு.

மூன்றாவது முட்டை விலை ஏறி இறங்குவது தேங்காய் விலை அதிகரித்திருப்பது.

நாலாவது தமிழ்ப் பகுதிகளில் நிறுத்தப்பட்டிருக்கும் ஜேவிபி வேட்பாளர்களுக்கு வெகுசனக் கவர்ச்சி குறைவு என்பது.

தென்னிலங்கை அரசியலைப் பொறுத்தவரை அனுர ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டமை ஒரு மாற்றம் தான். அதில் சந்தேகம் இல்லை. அந்த மாற்றம் ஒரு வெற்றி அலையாக தமிழ் பகுதிகளுக்கும் பரவியது. தமிழ்ப் பகுதிகளில் உள்ள படித்தவர்கள், விவரம் தெரிந்தவர்கள் மத்தியில் ஜேவிபி குறித்த ஓர் எதிர்பார்ப்பும் காணப்பட்டது.

குறிப்பாக தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் மீது ஏற்பட்ட வெறுப்பு, அக்கட்சிகள் தங்களுக்கு இடையே ஐக்கியப்படாமை, அக்கட்சிகள் உதிரிகளாக நின்று வாக்கு கேட்பது, சுயேச்சைகளின் அதிகரிப்பு… போன்ற பல விடயங்கள் காரணமாகத் தமிழ் தேசிய கட்சிகளின் மீது மக்களுக்கு வெறுப்பும் சலிப்பும் ஏற்பட்டு வரும் ஒரு பின்னணியில், ஒரு பகுதி படித்தவர்கள், அரசியலை அறிவுபூர்வமாக அணுகுபவர்கள், ஜேவிபியை ஒரு மாற்றாக பார்க்க தொடங்கிய ஒரு நிலைமை சில வாரங்களுக்கு முன்பு வரை காணப்பட்டது.

ஆனால் கடந்த சில வாரங்களுக்குள் அந்த எதிர்பார்ப்புகள் குறையத் தொடங்கி விட்டது.

குறிப்பாக தமிழ்ப் பகுதிகளில் ஜேவிபியின் வேட்பாளராக நிறுத்தப்பட்டிருப்பவர்கள் பெருமளவுக்கு மக்கள் அபிமானத்தை வென்றெடுத்தவர்கள் அல்ல. அவர்கள் பொதுவெளியில் ஆற்றும் உரைகளும் தமிழ் மக்களுக்கு ஏமாற்றம் தருபவைகளாக காணப்படுகின்றன. திருகோணமலையில் ஜேவிபி நிறுத்தியிருக்கும் ஒரு வேட்பாளர் ஒப்பீட்டளவில் மூன்று இனங்களின் மத்தியிலும் தன் கவர்ச்சியை ஓரளவுக்குக் கட்டி எழுப்பி வைத்துள்ளார். ஆனால் ஏனைய தமிழ்ப் பகுதிகளில் நிலைமை அவ்வாறு இல்லை என்று தெரிகிறது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராகிய சந்திரசேகரன் தமிழ்ப் பகுதிகளில் குறிப்பாக, வடக்கில் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ பிரதிநிதிபோல காட்சி தருவது தொடர்பிலும் விமர்சனங்கள் அதிகரித்து வருகின்றன. அரச வைபவங்களில் அவர் அதிகம் துருத்திக் கொண்டு தெரிகிறார். அதுவும் அனுர கொண்டு வந்த மாற்றம் எது என்ற சந்தேகத்தை தமிழ் மக்கள் மத்தியில் எழுப்புகின்றது.

மேலும் அனுர ஆட்சிக்கு வந்ததும் முட்டை விலை குறைந்தது. ஆனால் அது தற்காலிகமானது என்பதைத் தான் சந்தை நிலவரங்கள் பின்னர் வெளிப்படுத்தின. அப்படித் தான் தேங்காயின் விலையும். மாரி காலங்களில் தேங்காய் உற்பத்தி குறைவதனால் தேங்காய் ஏற்றுமதியைத் தடுக்கும் அரச தீர்மானம் ஒன்று அமுலில் உள்ளது. ஆனால் அதை மீறி தேங்காய் ஏற்றுமதி செய்யப்படுவதாக நுகர்வோர் குற்றம் சாட்டுகிறார்கள்.

முட்டையைப் போலவே தேங்காயும் எல்லா வீடுகளின் சமையலறைகளிலும் அத்தியாவசியமான ஒரு பொருள். அதன் விலை அதிகரிப்பானது ஜேவிபி கொண்டு வந்திருக்கக்கூடிய மாற்றம் தொடர்பான ஏமாற்றங்களை அதிகப் படுத்தியுள்ளது. ஆட்சிக்கு வந்து சில வாரங்களில் அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்ய முடியாது என்பது அரசியலை ஓர் அறிவியலாக பயில்பவர்களுக்கு விளங்கும். ஆனால் சாதாரண வாக்காளர்களுக்கு அது விளங்காது. தேங்காயும் முட்டையும் அனுர மீதான எதிர்பார்ப்பைக் குறைக்க கூடும்.



அடுத்தது பிரதான விடயங்கள். இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ரில்வின் சில்வா தெரிவித்த கருத்துக்கள், ஜேவிபியிடம் எந்த அடிப்படை மாற்றமும் ஏற்படவில்லை என்பதனை நிரூபித்தன.

எனது கட்டுரைகளில் நான் திரும்பத் திரும்ப கூறி வரும் விடயம் அது தான். அரசுத் தலைவராக தெரிவு செய்யப்பட முன்னரே அவரை நோக்கி அது தொடர்பான கேள்விகளை நான் பகிரங்கமாக எனது கட்டுரைகளில் எழுப்பியிருந்தேன்.

அக்கேள்விகளுக்கு புலம் பெயர்ந்த தமிழர் ஒருவர் என்னை விமர்சித்து பதில் எழுதியிருந்தார். அவர் இடதுசாரி பாரம்பரியத்தில் வந்தவராக தன்னை காட்டிக் கொள்ளும் ஒருவர். அவர் எனக்கு எழுதிய பதில்களை இப்பொழுது காலம் தோற்கடித்து விட்டது.

இனப்பிரச்சினையை ஜேவிபி ஒரு மனிதாபிமானப் பிரச்சினையாகத் தான் விளங்கி வைத்திருக்கிறது. அதை இலங்கைத்தீவின் பன்மை தேசிய பண்புக் கூடாக விளங்கி வைத்திருக்கவில்லை. இலங்கைத்தீவில் ஒன்றுக்கு மேற்பட்ட தேசங்கள் உண்டு என்பதனை ஏற்றுக் கொள்ளாமை தான் இனப்பெருச்சினைக்கு மூல காரணம். இந்த அடிப்படையில் தமிழ் மக்களின் தேசிய இருப்பை ஏற்றுக் கொண்டு தமிழ் மக்கள் இறைமையும் சுயநிர்ணய உரிமையும் கொண்ட ஒரு தேசிய இனம், தேசம் என்ற அடிப்படையில் தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வை முன்வைக்காத வரையிலும் இனப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. ஆனால் இந்த விடயத்தில் ரில்வின் சில்வா தெரிவித்த கருத்துக்கள் ஜேவிபியிடம் அடிப்படை விளக்கம் இல்லை என்பதை நிரூபிப்பதாக அமைந்திருந்தன.

அடுத்தது பயங்கரவாத தடைச் சட்டம். அரசாங்கத்துக்கு எதிராகப் போராடும் ஒரு தரப்பாக இருக்கும் பொழுது ஜேவிபி பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக சுமந்திரன் போன்றவர்களோடு சேர்ந்து போராடியது. ஆனால் இப்பொழுது அது அதன் வார்த்தைகளிலிருந்து வழுக்கத் தொடங்கி விட்டது என்று சுமந்திரன் குற்றம் சாட்டுகிறார். அது உண்மை. இனப் பிரச்சினை தொடர்பாக சரியான விளக்கம் இல்லை என்றால், அதோடு தொடர்புடைய ஏனைய விடயங்களிலும் அப்படித்தான் முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கும்.

சிங்கள பௌத்த பெருந்தேசிய வாத நோக்கு நிலையில் இருந்து பார்க்கும் பொழுது தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் பயங்கரவாதமாகத் தான் தெரியும். ஜெயவர்த்தன பயங்கரவாதத் தடைச் சட்டத்தை கொண்டு வந்து தமிழ்ப் போராளிகளை பயங்கரவாதிகள் என்று விழித்தார். ஆனால் ஜேவிபினர் அவர்களுடைய இரண்டாவது போராட்டத்தை தொடங்கிய பொழுது அவர் அவர்களை பயங்கரவாதிகள் என்று விழிக்கவில்லை. நாசகார சக்திகள் என்று தான் விழித்தார். வார்த்தைத் தெரிவில் கூட ஜெயவர்த்தனவிடம் இனவாதம் இருந்தது. ஆயுதமேந்திய தமிழ் மக்களை அவர் பயங்கரவாதிகள் என்று அழைத்தார். ஆனால் சிங்கள மக்களை நாசகார சக்திகள் என்று அழைத்தார்.

ஆயுதப் போராட்ட கால கட்டத்தில் தமிழ் இயக்கங்களைப் போலவே ஜேவிபியும் மிகக் கொடூரமாக நசுக்கப்பட்டது. அதன் உறுப்பினர்கள் கொல்லப்பட்டு ஆறுகளில் வீசப்பட்டார்கள். இன்னொரு பகுதியினர் குற்றுயிராக டயர்களோடு போட்டுக் கொளுத்தப்பட்டார்கள். அபகீர்த்தி மிக்க ஒரு போலீஸ் உயரதிகாரி அவர் சித்திரவதைகளுக்குப் பேர் போனவர்.

தன்னிடம் அகப்பட்ட ஜேவிபிக்காரர்களை எப்படிச் சித்திரவதை செய்வார் என்பது தொடர்பாக ஒரு கதை அப்பொழுது வெளிவந்தது. இரண்டு குமிழ்முனைப் பேனாக்களை அவர் கைதிகளின் இரண்டு காதுகளுக்குள்ளும் செருகுவார். கைதி உண்மையைக் கூறாவிட்டால் அவர் தன் இரண்டு கைகளாலும் அந்த இரண்டு குமிழ் முனை பேனாக்களையும் பலமாக அறைவார். குமிழ்முனைப் பேனா காதைக் கிழித்துக் கொண்டு கபாலத்தைத் துளைக்கும். இப்படிப் பட்ட கொடுமையான அனுபவங்களூடாக வந்த ஒரு இயக்கம், இப்பொழுது பயங்கரவாத தடைச் சட்டத்தை நியாயப்படுத்துகின்றதா?

அது மட்டுமல்ல, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்திலும் ஜேவிபி தீவிரமான நிலைப்பாடுகளை எடுக்கவில்லை. பல ஆண்டுகளுக்கு முன்பு வவுனியாவில் நடந்த ஒரு கருத்தரங்கில் கலாநிதி விஜய ஜெயலத் உரையாற்றும் பொழுது இலங்கைத் தீவு காணாமல் ஆக்கப்பட்டவர்களை மறந்து விடும் ஒரு குரூரமான பாரம்பரியத்தைக் கொண்டிருக்கிறது என்ற பொருள்பட உரையாற்றினார். அவர் அவ்வாறு கூறியது, கடத்தப்பட்டு அல்லது கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட ஜேவிபி உறுப்பினர்களின் அல்லது ஆதரவாளர்களின் கதையைத் தான். ஆயிரக்கணக்கான ஜேவிபியினர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

அது தொடர்பான சரியான புள்ளி விபரம் கூடக் கையில் இல்லை. ஆனால் அது தொடர்பாக ஜேவிபி எப்பொழுதாவது திறந்த, நீதியான விசாரணையைக் கோர இல்லை. ஏன்? ஏனென்றால், அவ்வாறு விசாரணைகள் நடந்தால் படைத்தரப்பே குற்றம் சாட்டப்படும்.

யுத்த வெற்றிக்கு பின் எந்தப் படைத் தரப்பை ஜேவிபி தலையில் வைத்துக் கொண்டாடியதோ, இப்பொழுது அனுரவுக்கு எந்த படைதரப்பு அதிகம் வாக்களித்ததோ, அதே படைத்தரப்பை விசாரணைக் கூண்டில் ஏற்ற வேண்டியிருக்கும். ஜேவிபி அதை விரும்பவில்லை. அதாவது அங்கேயும் இனத்தின் வெற்றியை தான் ஜேவிபி பாதுகாக்க முற்பட்டது. தனது சொந்த தோழர்களுக்கான நீதியை அல்ல.

மேலும் கடந்த வாரம், தமிழ் மக்கள் மத்தியில் உள்ள மூத்த சமூகச் செயற்பாட்டாளர் ஆகிய செல்வினை பனம் பொருள் அபிவிருத்தி சபை பணிப்பாளர் பதவிக்கு நியமித்த ஜேவிபி அமைச்சர், சில நாட்களில் அந்த முடிவை மாற்றி அப்பதவிக்கு வேறொருவரை நியமித்திருக்கிறார். என்ன காரணத்துக்காக செல்வின் நீக்கப்பட்டார்?

செல்வினுக்கு அப்பதவி வழங்கப்பட்ட பொழுது அதை ஒரு பெரிய மாற்றமாகக் காட்டி சில தமிழ் இடதுசாரிகள் சமூக வலைத்தளங்களில் எழுதினார்கள். அரசியல் நோக்கு நிலை வேறுபாடுகளுக்கும் அப்பால் ஜேவிபி ஒரு புதிய கலாச்சாரத்தை உருவாக்குகிறது என்ற பொருள்படவும் எழுதினார்கள். ஆனால் அப்படி எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்பதைத் தான் செல்வின் விவகாரம் தமிழ் மக்களுக்கு உணர்த்தியது.

நிறைவேற்று அதிகாரம் கிடைத்ததும் ஜேவிபி அதே சிங்கள பௌத்த அரச கட்டமைப்பின் கைதியாக மாறி விட்டதா? அனுர அலை அதன் மினுக்கத்தை இழந்து வருகிறதா?


அனுர ஜனாதிபதியாக வருவதற்கு முன்பு நான் அவரிடம் பகிரங்கமாக சில கேள்விகளைக் கேட்டு ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். அக்கேள்விகளுக்கு பதில் கூற முற்பட்ட தமிழ் ஜேவிபியினர்கள் ஒரு விடயத்தை திரும்பத் திரும்பச் சொன்னார்கள். தென்னிலங்கையில் ஏற்பட்ட தன்னெழுச்சிப் போராட்டங்களின் பின் இனவாதம் பின்வாங்கி விட்டது என்பதுதான்.

அது ஆனால் அது பின்வாங்கவில்லை. அது தற்காலிகமாக தன்னை தற்காத்துக் கொண்டது. அல்லது பதுங்கிக் கொண்டது அல்லது உருமறைப்புச் செய்து கொண்டது என்பது தான் சரியா?

கடந்த சில வார கால அனுர ஆட்சி தமிழ் மக்களுக்கு உணர்த்துவது அதைத் தானா?

# அமெரிக்காவின் துணை ஜனாதிபதி ஆகிறார் ஆந்திர மருமகன் ஜேடிவான்ஸ்

ஆந்திர மாநிலத்தின் மருமகன் அமெரிக்காவின் துணை ஜனாதிபதி பதவி ஏற்க உள்ளார். ஆந்திராவின் கிருஷ்ணா மாவட்டத்தை பூர்விகமாக கொண்ட உஷா சிலுக்கூரியின் கணவரான ஜேடி வான்ஸ் விரைவில் அமெரிக்காவின் துணை ஜனாதிபதி ஆகிறார்.




ஜேடி வான்ஸ் என்பவரை தேர்தலுக்கு முன்பே இவர் தான் துணை ஜனாதிபதி என டொனால்டு ட்ரம்ப் முடிவு செய்து விட்டார். தேர்தல் வெற்றிக்குப் பிறகும் இதை டொனால்டு ட்ரம்ப் உறுதி செய்தார். ஜேடி வான்ஸ் ஜனாதிபதி தலைவர் ஆவது உறுதி. பத்திரிக்கையாளரான இவர், சட்டப் படிப்பு படித்து, செனட்டராக பணியாற்றி வருகிறார். இவரது மனைவி உஷா சிலுக்கூரி ஒரு இந்தியர். அதிலும் ஆந்திராவை சேர்ந்தவர். இவர் பிறந்து வளர்ந்தது அமெரிக்கா என்றாலும், இவரது மூதாதையர்கள் ஆந்திராவில் உள்ள கிருஷ்ணா மாவட்டம், உய்யூ ரு மண்டலம், சாய்புரம் கிராமத்தை சேர்ந்தவர்களாவர். உஷா சிலுக்கூரியின் பெற்றோர்களான ராதா கிருஷ்ணா மற்றும் லட்சுமி ஆகியோர் கடந்த 1980ல் அமெரிக்காவுக்குச் சென்றனர்.

தாய் லட்சுமி, மூலக்கூறு உயிரியல், உயிர் வேதியியல் துறை நிபுணராக அமெரிக்காவில் பணியாற்றி வருகிறார். தந்தை ராதா கிருஷ்ணா 'கிருஷ் சிலுக்கூரி'யாக அனைவராலும் அறியப்பட்டவர். இவர், ஏரோ ஸ்பேஸ் பொறியாளராக பணியாற்றியவர். கலி:.போர்னியாவில் உள்ள சாண்டியாகோவில் உஷா சிலுக்கூரி பிறந்தார். இவர், ஏல் பல்கலை கழகத்தில் வரலாறு படிப்பில் பட்டம் பெற்றார். கேம்பிரிட்ஜ் பல்கலை கழகத்தில் தத்துவயியல் படித்தார். அங்குள்ள உச்ச நீதிமன்றத்தில் உஷா சிலுக்கூரி பணியாற்றினார்.

சட்டப்படிப்பு கல்லூரியில் தான் முதன் முதலாக உஷா சிலுக்கூரியை ஜேடி. வான்ஸ் சந்தித்தார். அதன் பின்னர் இவர்களின் நட்பு காதலாக மாறியது. 2014ல் இவர்களின் திருமணம் கெண்டகியில் இந்து முறைப்படி நடந்துள்ளது. இவர்களுக்கு 3 பிள்ளை கள். கணவரின் வெற்றிக்கு பின்னால் உஷா சிலுக்கூரியின் கடின உழைப்பும் அடங்கி உள்ளது. அரசியலில் அவருக்கு உறுதுணையாக உஷா இருந்தார்.

ஒஹாயோ செனட்டராக தனது கணவர் ஜேடி வான்ஸ் போட்டியிட்ட போது, அவருக்கு ஆதரவாக உஷா தீவிர பிரச்சாரம் மேற்கொண்டார். உஷா சிலுக்கூரி விரைவில் அமெரிக்காவின் இரண்டாவது பெண்மணியாக உள்ளார் என்பது இந்தியர்கள் அனைவருக்கும் பெருமை தரக் கூடிய விஷயம் என ஆந்திராவில் அவர்களின் உறவினர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

# இலங்கை முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புச் செலவு தொடர்பில் அதிர்ச்சியான தகவல்களை வெளியிட்ட அமைச்சர் விஜிய ஹேரத்



முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பிற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி சகல பொலிஸ் அதிகாரிகளுக்கும் மருந்து வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியை விட அதிகம் என அமைச்சர் விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம் பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு செலவு தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் முன்வைத்த கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனை விவரித்தார்.

அதற்காக நூற்றுக்கும் அதிகமான பொலிஸ் மற்றும் படை அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் சில ஜனாதிபதிகளுக்கு 180 வரையான பாதுகாப்பு அதிகாரிகள் கடமையாற்றுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு அதிகாரிகள் மாத்திரமன்றி பாதுகாப்பு வாகனங்கள், பஸ், டிபன்டர் ரக வாகனங்கள், முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள், அம்பியுலன்ஸ் வண்டி என சகலதும் வழங்கப்பட்டுள்ளது.

சராசரியாக பொலிஸ் பாதுகாப்பு வழங்குதல் மற்றும் ஏனைய பராமரிப்பு செயற்பாடுகளுக்காக 1100 மில்லியன் ரூபா வரை செலவிடப்படுவதாக கணக்கிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்கட்டினார்.

ஒரு வருடத்திற்கு செலவாகும் இந்த செலவு பொலிஸ் வைத்தியசாலையின் ஒரு வருடத்திற்கான செலவை விட அதிகம், இவ்வாறான செயற்பாடுகளை மாற்ற வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், குழுவின் சிபாரிசுக்கு இணங்க எதிர்காலத்தில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும்,

அந்த அமைச்சரவை பத்திரத்திற்கு இணங்க சகல முன்னாள் ஜனாதிபதிகளுக்குமான சலுகை முறைகள் மற்றும் பாதுகாப்புடன் தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

மேலும் விசேட பாதுகாப்பு தேவைப்பாடு உள்ள முன்னாள் ஜனாதிபதிகளுக்காக விசேட பாதுகாப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் விபரித்தார்.

பயங்கரவாதத் தடைச 'சட்டத்தை திருத்துவது அல்லது ஒழிப்பது தொடர்பில் அரசாங்கம் தனது நிலைப்பாட்டை மாற்றவில்லை என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

புதிய நாடாளுமன்றத்தில் இந்த விடயம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து சில தரப்பினரால் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ள நிலையில், அமைச்சரின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

சில ஊடகங்களால் தம்மை தவறாக மேற்கோள் காட்டி இந்த விடயத்தை விளக்கியதாக குறிப்பிட்டுள்ளார். வடக்கிலுள்ள சில அரசியல்வாதிகள் கூறுவது போன்று அரசாங்கம் இந்த விடயத்தில் இரட்டை நிலைப்பாட்டை கடைப்பிடிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய தருணத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தை திருத்தவோ அல்லது நீக்கவோ முடியாது என்றும், புதிய நாடாளுமன்றம் கூட்டப்பட்டவுடன், அந்த விடயம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# தமிழருக்கு தேசிய மக்கள் சக்தி காட்டும் திசை தெளிவாக இருக்க வேண்டும்

– த.கோபாலகிருஷ்ணன் –

21.09.2024 அன்று நடைபெற்று முடிந்த இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசநாயக்காவைத் தெரிவு செய்ததன் மூலம் இந்நாட்டு அரசியலில் ஒரு முறைமை மாற்ற–பண்பு மாற்ற எதிர்பார்ப்பைக் குறிப்பாக ஊழல், மோசடி, அதிகார துஷ்பிரயோகமற்ற–சட்டம் ஒழுங்கைப் பாரபட்சமின்றி முறையாகப் பேணக் கூடிய–வாரிசு அரசியலற்ற ஓர் அரசாங்கம் அமைய வேண்டுமென்ற அவாவை தென்னிலங்கைச் சிங்களப் பெரும்பான்மைச் சமூகம் வெளிப்படுத்தியுள்ளது.

அதேவேளை வடக்கு கிழக்கு மாகாணத் தமிழர்களைப் பொறுத்தவரை கடந்த ஜனாதிபதித் தேர்தல்களை விடவும் இம்முறை நடந்துள்ள தேர்தலில் குறிப்பிட்ட தொகையினர் அனுரகுமார திசநாயக்காவுக்கு வாக்களித்தமைக்குப் பிரதான காரணங்களாவன.

தமிழ்த் தேசியக் கட்சிகள் என நாமம் சூட்டப்பட்ட கட்சிகளின் தேர்தல் மைய ஏமாற்று கதிரைக் கனவு அரசியலின் மீது ஏற்பட்ட வெறுப்பும் விரக்தியும் அடிப்படைக் காரணம்.

மற்றக் காரணம், கடந்த காலங்களில் வலதுசாரிக் கட்சிகள் நிறுத்திய வேட்பாளர்களுக்கு வாக்களித்ததன் மூலம் எந்த நன்மைகளையும் அடைய முடியவில்லை. அதனால் மாற்றம் வேண்டி ஒரு இடதுசாரித் தலைவருக்கு வாக்களித்துள்ளனர். இதன் எதிர்பார்ப்பு இனவாதச் செயற்பாடுகளற்றதோர் அரசாங்கமே தவிர இனப் பிரச்சனைக்கான திருப்தியான அரசியல் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையல்ல.

இன்னொரு காரணம், முழு நாட்டிலும் ஏற்படும் முறைமை மாற்றத்தினால் அதாவது அம் முறைமை மாற்றத்தின் அம்சங்களான ஊழல், மோசடி, அதிகார துஷ்பிரயோகமற்ற அரச நிர்வாகம்–சட்டம், ஒழுங்குகள் பாரபட்சமின்றி முறையாகப் பேணப்படும் காவல் துறை மற்றும் நீதித்துறைக் கட்டமைப்பு– பொருளாதாரச் சீர்திருத்தங்களினால் அடையக்கூடிய வாழ்வாதார நன்மைகள் என்பன ‘நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்குமாங்கே பொசிவது போல்’ வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களுக்கும் இலங்கையர் என்ற ரீதியில் சுவறும் என்கின்ற எதிர்பார்ப்பு.

உண்மையில், வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களில் குறிப்பிட்ட தொகையினர் வாக்களித்தது ‘தேசிய மக்கள் சக்தி’ என்ற அரசியல் கட்சிக்கு அல்ல அதன் தலைவர் அனுரகுமார திசநாயக்கா என்ற ஆளுமை மீது ஏற்பட்ட அரசியல் வசீகரமும் நம்பிக்கையுமே அவர்களைத் ‘திசை காட்டி’ச் சின்னத்துக்கு வாக்களிப்பதற்கான அகத் தூண்டலை ஏற்படுத்தியதே தவிர மாறாகக் கட்சியின் கொள்கைகள் கோட்பாடுகளைக் கற்றுணர்ந்தனாலோ மேலும் கட்சி உறுப்பினர்களின் தேர்தல் பரப்புரையினாலோ அல்ல.

மட்டுமல்லாமல், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற ஆரம்பத்தில் தானாகவே முன்வந்து 13 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல் செய்யப் போவதாக அரசியல் கட்சிகளைக் கூட்டி அறிவிப்புச் செய்தவேளை அதற்குத் தான் ஆதரவு என அனுரகுமார திசநாயக்கா அறிவித்திருந்தமையும் ஜனாதிபதித் தேர்தலின் போது தனது ஆட்சியில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுமென்றும் அதுவரைக்கும் தற்போதைய அரசியலமைப்பின் அங்கமாகவுள்ள 13ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படுமென்றும் உறுதியளித்திருந்தமையும் அனுரகுமார திசநாயக்கவுக்கு வாக்களிப்பதற்கான அகத் தூண்டலை ஏற்படுத்தியிருக்கக்கூடும்.



ஊழல், மோசடி, அதிகார துஷ்பிரயோகங்களற்ற நாடு ஒட்டுமொத்த இலங்கையர்களுக்கும் தேவைதான். அதில் எந்தக் கருத்து வேறுபாடும் இருக்க முடியாது.

ஆனாலும், வடக்குக் கிழக்குத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் இந்நாட்டுத் தேசிய இனங்களிலொன்று என்ற அடிப்படையில் குறைந்தபட்சம் தமது அடையாளத்தையும் இருப்பையும் இழந்து விடாமல் ஐக்கிய இலங்கை எனும் சட்டகத்துக்குள் பேணிப் பாதுகாத்து வளர்த்தெடுக்கக் கூடிய நிரந்தரமான அதிகாரப் பகிர்வு பொறிமுறையை அரசியலமைப்பு ரீதியாக அவாவி நிற்கிறார்கள் என்பதும் நிதர்சனமே.

இலங்கைத் தேசியத்தின் இணைந்த கூறாக தமிழ்த் தேசியம் இருக்கலாமே தவிர தமிழ்த் தேசியம் இலங்கைத் தேசியம் என்ற பெயரில் பௌத்த சிங்களப் பேரினவாத மேலாதிக்கக் கருத்தியலுக்குள் கரைந்து போவதற்கு அனுமதிக்க முடியாது.

இத்தகைய தெளிவான எண்ணப்பாட்டின் அடிப்படையில் தான், ரணில் விக்கிரமசிங்க வெல்லக்கூடும் என்று அவருக்கு வாக்களித்தவர்களுள்–சஜித் பிரேமதாச வெல்லக் கூடுமென்று எண்ணியும் தமிழரசுக் கட்சி கேட்டுக் கொண்டதனாலும் அவருக்கு வாக்களித்தவர்களுள்– ‘போலி’த் தமிழ்த் தேசியவாதிகள் தமது வார்த்தை ஜாலங்களால் ஊட்டிய உணர்ச்சியிலும் உசுப்பேற்றலிலும் எடுபட்டுத் தமிழ்ப் பொது வேட்பாளரின் ‘சங்கு’ச் சின்னத்துக்கும் வாக்களித்தவர்களுள் கணிசமான தொகையினர் தேர்தலில் அனுரகுமார திசநாயக்கா வெற்றி பெற்றதைக் கண்டு அவருக்கு வாக்களித்திருந்திருக்கலாமே என்று ஆதங்கப்பட்டவர்களும் உண்டு.

ஏனெனில், இடதுசாரித்துவம் எப்போதுமே தேசிய இனமொன்றின் தனித்துவமான (சுய நிர்ணய உரிமை உள்ளடங்கலான) அரசியல் அபிலாசைகளை அங்கீகரித்தே வந்துள்ளது.

தற்போது அனுரகுமார திசநாயக்க தலைமை தாங்கும் தேசிய மக்கள் சக்தியின் தாய்க் கட்சியான ஜே வி பி (ஜனதா விமுக்திப் பெரமுன– மக்கள் விடுதலை முன்னணி)யை அதன் ஆரம்ப காலகட்டத்தில் (1965–1989) ரோகண விஜேவீர தலைமை தாங்கிய காலத்திலும் சரி அதற்குப் பின்னர் 1990 இலிருந்து 2014 வரை தலைமை தாங்கிய சோமவன்ச அமரசிங்க காலத்திலும் சரி இறுதியாக 2014 இலிருந்து 2024 ஜனாதிபதி தேர்தல் வரை அனுர குமார திசநாயக்க தலைமை தாங்கிய போதிலும் சரி ஜே வி பி ஐத் தமிழ் மக்கள் அதன் கடந்த காலத்துத் தமிழர் விரோத செயற்பாடுகளின் காரணமாக எதிரியாகவே நோக்கி வந்தனர். அதில் உண்மையும் உண்டு.

ஆனால் ஜே வி பி யானது அனுர குமார திசநாயக்க தலைமையில் தேசிய மக்கள் சக்தி (என் பி பி) யாக பரிணாமம் பெற்ற போது அதனைத் திருந்திய–இனவாதமற்ற ஜே வி பி யாக நோக்கத் தலைப்பட்டதின் விளைவுதான் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அனுரகுமார திசநாயக்காவுக்கு விழுந்த வடக்கு கிழக்குத் தமிழர்களின் வாக்குகளாகும்.

இந்த நம்பிக்கைகளின் அடிப்படையில் ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்கா தலைமையிலான இடதுசாரி அரசாங்கத்தை எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலினூடாக மேலும் பலப்படுத்த வேண்டுமென்ற எண்ணமும் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தமிழர் அரசியலிலும் மாற்றத்தை வேண்டி நின்றவர்களிடையே தலை தூக்கியிருந்தது.

இதற்குக் காரணம் தமிழ்த் தேசியம் பேசிய அரசியற் கட்சிகளிடையேயும் கட்சிகளுக்குள்ளேயும் ‘கதிரை’களுக்காக ஏற்பட்ட குத்து வெட்டுக்களும்–அபிவிருத்தி பற்றிப் பேசிய இணக்க அரசியல் கட்சிகளிடம் நிலவிய ஊழல் பலவீனங்களும் இவ்விரு தரப்பினர் மீதும் மக்களுக்கு அசூசையை ஏற்படுத்தியிருந்ததால் அனுரகுமாரதிசநாயக்காவின் தலைமையிலான ஆட்சியைத் தேர்தலின் ஊடாக மேலும் வலுப்படுத்த வேண்டுமென எழுந்த எண்ணமும் ‘அனுர அலை’ மேலெழக் காரணமாயிற்று.

ஆனால், வடக்குக் கிழக்கைப் பொறுத்தவரை இந்தச் சாதகமான அலையை தேசிய மக்கள் சக்தியின் நிர்வாகம் அரசியல் மதிநுட்பத்துடன் பயன்படுத்தத் தவறவிட்டது போல் தான்படுகிறது. அல்லது வடக்குக் கிழக்குத் தமிழர்களை ஏனோ தானோ என்ற மனப் போக்கில் கையாள முற்படுகிறதா என்ற கேள்வி மேலெழும்புகிறது.

ஏனெனில், வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள யாழ்ப்பாணம்– கிளிநொச்சி, வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, திகாமடுல்ல (அம்பாறை) ஆகிய ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் திருகோணமலை தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்குரிய தேசிய மக்கள் சக்தியின் வேட்பு மனுக்களில் இடம் பெற்றுள்ள தமிழ் வேட்பாளர்களை நோக்கும் போது அவர்கள் வாக்காளர்களை வசீகரிப்பவர்கள் மக்களிடையே பிரபல்யம் பெற்றவர்களாக–ஏற்கெனவே அரசியல் மற்றும் சமூக சேவைகளில் ஈடுபட்டவர்களாக–சமூக அமைப்புகளைப் பின்புலமாகக் கொண்டவர்களாக இல்லையென்பதே பரவலான அபிப்பிராயம். மொத்தத்தில் அவர்களை ‘முகம் தெரியாதவர்கள்’ என்றே மக்கள் அழைக்கிறார்கள். இந்த விடயத்தில் வடக்கு கிழக்குத் தமிழர்களின் மனங்களை தேசிய மக்கள் சக்தி வெல்லத் தவறிட்டது.

மக்கள் கட்சிக்காக மட்டுமே வாக்களிக்க மாட்டார்கள். கட்சிக்காக வாக்களிப்பவர்கள் சிறு தொகையினரே. பெருந்தொகையினர் வேட்பாளர்களின் தகுதி தராதரங்கள்–அவர்களின் மக்களுடனான ஊடாட்டம்–குண நலன்கள் மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றைக் கணக்கிலெடுத்துத்தான் வாக்களிப்பார்கள். அதுவே வெற்றி வாய்ப்பைத் தரும்.

இவைகளுக்கு மத்தியில் ஜே வி பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தமிழ் மக்களுக்கு 13 ஆவது திருத்தமும் அதிகாரப் பகிர்வும் அவசியமில்லை எனும் சாரப்பட ஊடக அறி விப்புச் செய்துள்ளமை ‘தேசிய மக்கள் சக்தி’குறித்த எதிர்மறையான எண்ணங்களுக்கு வடக்குக் கிழக்குத் தமிழர்களை இட்டுச் சென்றுள்ளது.

இந்த எதிர்மறைத் தாக்கங்களை ஈடு செய்ய தேசிய மக்கள் சக்தி தேர்தலுக்கு முன்பும் தேர்தலுக்குப் பின்னும் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

ஊழல், மோசடி, அதிகார துஷ்பிரயோகமற்ற–பொருளாதார மீட்சி பெற்ற இலங்கையை மட்டுமல்ல தமது அடையாளத்தையும் இருப்பையும் பேணிப் பாதுகாத்து வளர்த்தெடுக்கக் கூடிய இனவாதமற்றதோர் இலங்கையையும் தான் இலங்கைத் தமிழ்த் தேசிய இனம் காணத் துடிக்கின்றது.

இதற்குத் தேசிய மக்கள் சக்தி காட்டும் திசை தெளிவானதாகவிருந்தால் தான் வடக்கு கிழக்குத் தமிழர்கள் எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க முன் வருவார்கள்.



## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கணபதிப்பிள்ளை பத்மாவதி

வேலணை முடிப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்மாவதி கணபதிப்பிள்ளை அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாள் 09 நவம்பர் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி பத்மாவதி கணபதிப்பிள்ளை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! இழுபறியாக இருந்த சில வேலைகள் சாதகமாக நடந்து முடியும். அரசாங்கம் தொடர்பான விவகாரங்களில் சாதகமான போக்கு காணப்படும். மரியாதையும், அந்தஸ்தும் அதிகரிக்கும். கடினமான முயற்சிகள் கூட எளிமையாக செய்ய முடியும். தொழில் வியாபாரத்தில் வசூலாக வேண்டிய கடன் பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு சக ஊழியர்களுடன் இருந்த கருத்து வேற்றுமை குறையும்.





ரிஷபராசி அன்பர்களே! எதிலும் முன்னேற்றம் காணப்படும். அடுத்தவருக்கு எவ்வளவு நல்லது செய்தாலும் அது எடுபடாமல் போகலாம். அதே நேரத்தில் பொருள் வரத்து அதிகரிக்கும். வாகனம், பூமி மூலம் லாபம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். எதிர்பார்த்த லாபம் வரும். உத்யோகத்தில் செயல் திறமை வெளிப்படும். சுதந்திரமாக செயல்படும் வாய்ப்பு கிடைக்கும். நீண்ட நாட்களாக பணம் கைக்கு வந்து சேரும்.





மிதுனராசி அன்பர்களே! முயற்சிகள் வெற்றி பெறும். வேகத்தை குறைத்து விவேகமுடன் செயலபடுவது நன்மை தரும். எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் கவனத்துடன் வைப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்பட்டாலும் வந்து சேர்வதில் எந்த தடைகளும் இருக்காது. எந்த ஒரு வேலையையும் அதிக முயற்சி செய்து முடிக்க வேண்டி இருக்கும்.





கடகராசி அன்பர்களே! மற்றவர்கள் செய்கைகளால் மனவருத்தம் உண்டாகலாம். நீண்டநாள் இழுபறியாக இருந்து வந்த பிரச்சனை முடிவுக்கு வரும். தொழில் வியாபாரத்தில் இருந்து வந்த பின் தங்கிய நிலை மாறும். எதிர்பார்த்த ஆர்டர்கள் வந்து சேரும். வியாபார போட்டிகள் தடை தாமதங்கள் நீங்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் சாமர்த்தியமாக மேலதிகாரிகளின் பாராட்டுகளை பெறுவர். குடும்பத்தில் அமைதி குறைவது போல் தோன்றும்.





சிம்மராசி அன்பர்களே! சகோதரர்கள் மூலம் நன்மை உண்டாகும். மனோதைரியம் கூடும். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத தடங்கல்கள் வரலாம். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர். உத்யோகத்தில் இருப்பவர்கள் நினைத்ததை சாதிக்க வேண்டும் என்ற வேகத்தில் பணி புரிவார்கள். சிலருக்கு புதிய பதவி புதிய பொறுப்புகள் கிடைக்க பெறுவர். கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி நீடிக்கும்.




கன்னிராசி அன்பர்களே! காரியங்களில் தாமதமான போக்கு காணப்படும். உங்கள் வார்த்தைக்கு வெளி வட்டாரத்தில் மதிப்பு அதிகரிக்கும். உங்கள் பேச்சு வெறும் பேச்சு போல் மற்றவர்கள் நினைப்பார்கள். அதனால் அளவுடன் பேசுவது நல்லது. வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர் கள் மேலதிகாரிகளிடம் அனுசரித்து செல்வது நல்லது.




துலாம்ராசி அன்பர்களே! எல்லாவற்றிலும் எதிர்பார்த்த நன்மை உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் இருந்த பிரச்னை தீரும். நீண்ட நாளாக இருந்த கஷ்டம் நீங்கும். அரசாங்கம் மூலம் லாபம் ஏற்படும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் சாதகமாக இருக்கும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரத்தில் வாக்கு வன்மையால் புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர். தடைபட்ட ஆர்டர்கள் வந்து சேரும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவர்.





விருச்சிகராசி அன்பர்களே! நீங்கள் ஆராய்ந்து செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். அடுத்தவர்களுக்கும் உதவ போய் வீண் பழி ஏற்படலாம் கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். வாடிக்கையாளர்களின் கருத்துக்களுக்கு மதிப்பு கொடுப்பது நன்மை தரும். வியாபார ஸ்தலத்திற்காக புதியதாக இடம் வாங்குவீர்கள். மேலதிகாரிகளிடம் உங்களது கருத்துக்களை தெரிவிக்கும் போது கவனமாக பேசுவது நல்லது.








தனுசுராசி அன்பர்களே! மனதில் ஏதாவது கலக்கம் ஏற்படும். காரணமே இல்லாமல் வீண் பழி சுமக்க நேரிடும். ஒதுங்கி சென்றாலும் வலிய வந்து சிலர் சண்டை போடலாம் கவனமாக இருப்பது நல்லது. கண் சம்பந்தமான கோளாறுகள் ஏற்படலாம். தொழில் வியாபாரத்தில் திடீர் போட்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலை செய்யும் இடத்திலும், மேலதிகாரிகளிடமும் வீண் பேச்சுக்களை தவிர்ப்பது நல்லது.




மகரராசி அன்பர்களே! தடைப்பட்டு வந்த காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். பழைய பாக்கிகள் வசூலாகும். பணியாட்கள் மூலம் நன்மை ஏற்படும். சாமர்த்தியமான பேச்சின் மூலம் நன்மதிப்பை பெறுவீர்கள். உத்யோகத்தில் சிறப்பாக பணிகளை செய்து மேலதிகாரிகளிடம் பாராட்டு கிடைக்கப் பெறுவர்.




கும்பராசி அன்பர்களே! எதிர்பார்த்த காரிய வெற்றி உண்டாகும். புத்திசாதூரியத்தால் எதையும் செய்து முடிக்க முடியும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான சில முக்கிய முடிவுகள் எடுக்க நேரிடும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்களுடன் கவனமாக பழகுவது நல்லது. அடுத்தவரின் உதவி கிடைக்கும்.




மீனராசி அன்பர்களே! காரியத் தடை தாமதம் நீங்கும். இருப்பதால் எதிர்ப்புகள் விலகும். பொருளாதாரம் உயரும். வீண் கவலை விலகும். அடுத்தவர் விஷயங்களில் தலையிடுவதை தவிர்க்கவும். தொழில் வியாபாரத்தில் பங்காளியை அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் எதை பற்றியும் கவலைப்படாமல் செயலாற்றுவார்கள். மேலதிகாரிகளுடன் இணக்கமான சூழ்நிலை நிலவும். இறை வழிபாடு நன்மை தரும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# பல்கலைக்கழக மாணவர்களின் பொறுப்பு..

(17ம் பக்கத் தொடர்ச்சி) எதிர் காலத்தை உருவாக்கக் கூடிய அறிவியற் தரப்பினர் அப்படி வாழாதிருக்க முடியுமா? மாணவர்கள் தான் பெரும் போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். அவர்களே புதிய வழிகளைக் காணும் திறனுடையோர். என்பதால் அவர்கள் போராட்டக் களத்தில் முன்னணியினராக எப்போதும் இருக்கின்றனர்

உலகெங்கும் இப்படித் தான் நடந்திருக்கிறது. பாதிப்புகளிலிருந்து மீட்டு, அடுத்த கட்டத்தை நோக்கி அந்த மக்களை வழிநடத்துவதில் மாணவர்களே முன்னின்றனர், முன்னிற்கின்றனர்.

சமகாலத்தில் களத்தில் நிற்கும் அரசியற் கட்சிகளின் வினைத்திறனற்ற தன்மைகளையும் தலைமைகளின் ஆற்றற்குறைபாட்டையும் கண்டு அவற்றைச் சீராக்க வேண்டிய பொறுப்பும் மாணவர்களுக்கே உண்டு. அதற்குக் குறித்த தலைமைகளும் கட்சிகளும் செவி கொடுக்கவில்லை என்றால், அவற்றை நிராகரிப்புச் செய்ய வேண்டியது மாணவர்களுக்கு மாணவர் அமைப்புகளுக்குரிய பணியாகும் — பொறுப்பாகும். செவி கொடுத்தால், அவற்றைத் தம்முடன் இணைத்து வேலை செய்ய முடியும். முடியாதென்று அடம்பிடித்தால் அதை அவற்றை சமூக விலக்கம் செய்ய வேணும்.

2009க்குப் பிறகு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தன்னுடைய வரலாற்றுக் கடமைகளிலிருந்து தவறியது. அது சறுக்கிச் சறுக்கி இன்றைய சிதறிய நிலைக்கு வந்திருக்கிறது. இறுதியில் அணிகள், குழுக்கள் எனச் சிதறிய நண்டுக்குஞ்சுகள் போலாகி விட்டது.

ஆனால், இந்தப் பதினைந்து ஆண்டு காலத்திலும் மாணவர் அமைப்பு என்ன சொன்னது? உலக அரங்கிலும் உள்நாட்டிலும் தமிழ் மக்களின் ஒற்றுமையைக் காட்ட வேண்டும். ஒன்றுபட்டு நின்று தமிழ்ப் பலத்தை உணர்த்த வேண்டும் என்று தானே! அதற்காக மக்களெல்லாம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும் என அல்லவா!

அப்படி ஒற்றுமைக்காக மக்களைத் திரளச் செய்த மாணவர் அமைப்பு, கூட்டமைப்பை உடையாமல், சிதறாமல் பாதுகாத்ததா? உடைந்தும் பிரிந்தும் சிதறிச் சென்ற கட்சிகளையும் தலைமைகளையும் அழைத்துப் பேசி, முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு முயற்சித்ததா? மக்கள் நலனைப் புறந்தள்ளி விட்டு, தமது நலனையே முதன்மைப்படுத்திய கட்சிகளைக் கண்டித்ததா? அவற்றை ஒதுக்கியதா? அவற்றை மக்களிடம் இனங்காட்டியதா? எதுவும் செய்யப்படவில்லையே!

அப்படியென்றால், மாணவர் ஒன்றியத்திற்கு என்ன தகுதி இருக்கிறது, இன்னும் அரசியல் தலையீடுகளைச் செய்வதற்கு? தேர்தல் குறித்துப் பேசுவதற்கு? மக்களுக்கு ஆணையிடுவதற்கு?

முதலில் சிதறிக் கிடக்கும் தமிழ் அரசியல் கட்சிகளை ஒருங்கிணைப்பதற்கு முயற்சித்திருக்க வேண்டும். அதற்குச் சம்மதிக்காத கட்சிகளையும் தலைவர்களையும் இனங்காட்டி மக்களிடமிருந்து விலக்க வேண்டும். அதை இப்போதே செய்யலாம். செய்ய வேண்டும். அதுவும் ஒரு மக்கள் பணி, வரலாற்றுப் பணி தான்.

இந்தத் தேர்தலின் போதே அரசியற் கட்சிகளை அழைத்துப் பேசி அவற்றுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தலாம். அந்தப் புரிந்துணர்வின் அடிப்படையில் மக்கள் நலனை முன்னிறுத்தி ஒரு இணக்கத்தை எட்ட முடியும். அந்த இணக்கத்தின்படி பிராந்திய ரீதியாக எந்தத் தரப்பை முன்னிலைப்படுத்துவது? யாருக்கு வாய்ப்பளிப்பது? எனத் தீர்மானிக்க முடியும். அப்படிச் செய்தாலாவது பரவாயில்லை. அதையெல்லாம் விட்டு விட்டுப் பொத்தாம் பொதுவாக, தமிழர்களெல்லாம் தமிழ்த் தரப்புகளுக்கே வாக்களிக்க வேண்டும். சிங்களக் கட்சிகளையோ தென்பகுதித் தரப்புகளையோ ஆதரிக்கக் கூடாது என்று சொல்வது தவறு. இன்றைய நிலையில் தமிழ்க் கட்சிகளை விடவும் தென் பகுதித் தரப்புகள் பரவாயில்லை என்ற நிலைக்கு வந்துள்ளன. அவை இனவாதத்தைச் சொல்வதிலிருந்து விலகியுள்ளன. ஒப்பீட்டளவில் மாற்றத்தை நோக்கிப் பயணிக்க ஆர்வமாக உள்ளன. பல சமூகத்தினருக்குமான இடத்தை அளித்து, பல்லினத் தன்மையைப் பேண முற்படுகின்றன.

ஆனால், தமிழ்க்கட்சிகள் பிற இனங்களை விலக்குவதும் பின சமூகங்களிலிருந்து விலகியிருப்பதும் மட்டுமல்ல, தமக்குள்ளும் பிரிவுகளையும் பிளவுகளையுமே கொண்டுள்ளன. மிகப் பின்தங்கிய சிந்தனைப் போக்கைக் கொண்டுள்ளன. இது விடுதலைக்காகப் போராடும் இனத்தின் அரசியல் விடுதலைக்கும் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கும் பொருத்தமா? நியாயமா? சரியாக இருக்குமா? நிச்சயமாகப் பொருந்தாது.

உண்மையில் இந்த மாணவர் அமைப்புகள் தமிழ்த்தேசியவாதக் கட்சிகளையும் அணிகளையும் குழுக்களையும் இந்தத் தேர்தலின் போது ஒருங்கிணைத்திருக்க வேண்டும். அந்தக் கடப்பாடு, கடந்த காலத்தில் கூட்டமைப்புக்கு (தமிழ்த்தேசியத்துக்கு) ஆதரவளித்ததன் மூலம் மாணவர் அமைப்பினருக்குண்டு. அதைச் சொல்லி அணிகளையும் கட்சிகளையும் வற்புறுத்தியிருக்க வேண்டும். இப்பொழுது கூட அதைச் செய்யலாம். அது முடியவில்லை என்றால், மக்கள் பணியைச் சரியாகச் செய்யக் கூடிய, மக்களோடுள்ள, மக்கள் மீது மெய்யான கரிசனையைக் கொண்ட சக்திகளை இனங்கண்டு ஆதரிக்க வேண்டும். அந்த ஆதரவு பரிபூரணமாக — மக்கள் நலனின் அடிப்படையில் இருக்க வேண்டும். இதற்கான பொறுப்புக் கூறலைச் செய்ய வைப்பது அவசியமாகும்.

ஏனென்றால், இதே காலப்பகுதியில் அல்லது இதற்கு முன்பிருந்து தென்பகுதிப் பல்கலைக்கழகங்களின் (சிங்கள) மாணவர்கள் மேற்கொள்கின்ற அரசியற் செய்பாடுகள் முழு இலங்கைத் தீவையும் மறுமலர்ச்சிக்குள்ளாகும் வகையில் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கு எங்களுடைய மாணவர்கள் தயாராக வேண்டும். அல்லது மாற்றுப் பண்பாட்டின் அடிப்படையில் மாற்றுச் சக்திகளைக் கட்டியெழுப்ப வேண்டும். இதொன்றும் புதியதல்ல. செய்ய முடியாததும் அல்ல. முக்கியமாக, வரலாற்றுக் கடமையைச் செய்யும்போது ஏற்படும் பொறுப்பை ஏற்று மன்னிப்புக் கேட்பது மாண்பு. அதொரு வளர்ச்சியான செயற்பாடாகும்.

கடந்த சில நாட்களின் முன், ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்திச் செயற்பட்ட நிலாந்தன் (பொதுச்சபைப் பிரதிநிதி) பகிரங்க வெளியில் மன்னிப்புக் கேட்டிருக்கிறார். இதொரு முக்கியமான முன்னுதாரணச் செயற்பாடாகும். அறிவென்பது, துணிவு. மன்னிப்புக் கேட்பது மாண்பிலும் மாண்பு. தாம் பொதுவெளியில் முன்வைத்த கருத்துகள் செயல் வடிவம் பெறுவதற்கான சூழல் கனிய முன் சில முதிரா நடவடிக்கைகள் குறித்து அவர் தெளிவாகப் பேசியுள்ளார். இத்தகைய தகுதி யாரிடம் உண்டு? மாணவர் அமைப்புகள் இதை மனதிற் கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1970களில் கிழக்கிலே ஏற்பட்ட சூறாவளிச் சேதங்களை மீள் நிலைப்படுத்தியதும் 1980களில் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்களித்ததும் நினைவில் எழுகின்றன.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com













# தேசிய மக்கள் சக்திக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வழங்குவது ஆபத்தானது என்கிறார் ரோஹணவிஜயவீரவின் மகன் உவிந்து!

தேசிய மக்கள் சக்திக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்குவது ஆபத்தான விடயம் என ஜேவிபியின் ஸ்தாபக தலைவர் ரோகணவிஜயவீரவின் மகன் உவிந்து விஜயவீர எச்சரித்துள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் ஜேவிபிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்குவது அரசியல் ரீதியில் பேரழிவாக அமையும் என இரண்டாவது தலைமுறை கட்சியின் பொதுச் செயலாளரான உவிந்து விஜயவீர தெரிவித்துள்ளார்.

ஜேவிபிக்கு மூன்றில் இரண்டு கிடைத்தால் உருவாகக்கூடிய விளைவுகள் குறித்து வாக்காளர்கள் எச்சரிக் கையுடன் இருக்க வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

1977 பொதுத்தேர்தலில் மிகப்பெரும் பெரும்பான்மையை பெற்ற பின்னர் ஜேஆர் ஜெயவர்த்தன முன்னெடுத்த அரசியல் தந்திரோபாயங்கள் குறித்து நினைவுபடுத்தியுள்ள ரோஹனவிஜயவீரவின் மகன் அவ்வாறானதொரு நிலைமையை நாடு தாங்காது என குறிப்பிட்டுள்ளார். நாடாளுமன்றத்தை சுத்தம் செய்வதற்காக ஊழல் அரசியல்வாதிகளை தோற்கடிக்க வேண்டும் என்ற தேசிய மக்கள் சக்தியின் பிரகடனம் பிழையானது என நான் கருதவில்லை ஆனால் புதிய பழைய கட்சிகளில்இருந்து புதியவர்கள் பலர் போட்டியிடும் இந்த தருணத்தில் வாக்காளர்கள் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களை மாத்திரம் தெரிவுசெய்ய வேண்டும் என அழுத்தம் கொடுப்பது சரியாதல்ல என அவர்



குறிப்பிட்டுள்ளார். புதிதாக தேர்தலில் போட்டியிடும் அனைவருக்கும் சமமான வாய்ப்பை வழங்குவோம் எனஅவர் குறிப்பிட்டுள்ளார். தேசிய மக்கள் சக்தியின் பரப்புரைக்கு வாக்காளர்கள் பலியாக வேண்டாம் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையை பெற்றபோதும் நாட்டை ஆட்சி செய்ய முடியாமல் கோட்டாபய இடைநடுவில் கைவிட்டு சென்றது ஏன் என்பதை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் கட்சியின் வேட்பாளர்களின் வெற்றியை உறுதிப்படுத்தும் முகமாக வெல்லவாய பிரதேசத்தில் நடைபெற்ற பேரணிகளில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிறைவேற்று அதிகாரம் மற்றும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை நாடாளுமன்றில் இருந்தாலும் மக்கள் நம்பிக்கையின்றி எவராலும் நாட்டை ஆட்சி செய்ய முடியாது. 69 இலட்சம் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகி நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் எல்லையற்ற அதிகாரத்தைப் பெற்ற கோட்டாபய ராஜபக்ச இரண்டரை வருடங்கள் மாத்திரமே நாட்டை ஆட்சி செய்தமை இதற்கு சிறந்த உதாரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

**எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!**
**உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்**
**32வது ஆண்டு விழா – 23 மார்ச் 2025**
**ஞாயிற்றுக்கிழமை**
**சங்கீத சங்கமம் 2025**
**விபரங்களுக்கு:- 416 841 9600**

